விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 16 சனிக்கிழமை (30.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 194


ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கை வந்த சிவ்சங்கர் மேனன்

# ஜனாதிபதி, சம்பந்தனுடன் பேச்சு

## இலங்கை நிலைவரம் குறித்து ஆராய்வு

(கொழும்பு), இந்திய தேசிய பாதுகாப்புச் செயலர் சிவ்சங்கர் மேனன் நேற்று வெள்ளிக்கிழமை இலங்கைக்கு மேற்கொண்ட ஒரு நாள் விஜயத்தில், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட அரசியல் தலைவர்களை சந்தித்தார். இலங்கை அரசியல் நிலைவரம் குறித்தும் இரு நாட்டு உறவுகள் குறித்தும் அவர் விபரித்ததாகக் கூறப்படுகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)



## மேலும் 2 படகுகள் கிறிஸ்மஸ் தீவில்!

புகலிடம் கோருவோரை ஏற்றிச் சென்ற இரு படகுகள் அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை நேற்று அதிகாலை சென்றடைந்துள்ளன.

இலங்கையர்கள் எனக் கருதப்படும் 44 பேருடன் உள்ள ஒரு சிறிய படகு கிறிஸ்மஸ் தீவில் உள்ள சிறு துறைமுகத்துக்கு அப்பால் நங்கூரமிட்டுள்ளது.

கடைசியாக வந்துள்ள இந்த வெள்ளை – நீல நிற மீன்பிடி படகின் மேல் தட்டில் ஆட்கள் நிரம்பியுள்ளனர் போல தெரிகின்றது.

புதன்கிழமை தொடக்கம் இங்கு வந்து சேர்ந்த 3 கப்பல் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசு வடக்கில் தேர்தலை நடத்தினால் ஜெனிவா தீர்மானத்திலிருந்து தப்ப முடியும்

### ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு உண்மையான சுதந்திரத்தை வழங்குவதற்காக, அவர்களின் ஜனநாயக உரிமை மதிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக வட மாகாணத்திற்கான தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கில் தேர்தலை நடத்துவதன் மூலமே அடுத்த வருடம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் பிடியிலிருந்து மகிந்த அரசால் தப்பமுடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் எதிர்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றிணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ரணில் இவ்வாறு கூறினார். இச்சந்திப்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

மகிந்த அரசு கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களைக் கலைத்து தேர்தலை அறிவித்துள்ளது. உண்மையில், தேர்தல் தேவையாக இருப்பது வட மாகாணத்திற்குத்தான்.

2008ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை மகிந்த நடத்தியபோது வடக்கிற்கும் விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்று கூறினார். ஆனால், இப்போது அந்த வாக்குறுதிகளை மீறிவிட்டு தேர்தல் உடனடியாகத் தேவையில்லாத மாகாணங்களுக்கு தேர்தலை நடத்துகின்றார்.

இருப்பினும், எங்கு வேண்டுமானாலும் அவர் தேர்தலை நடத்தலாம். ஆனால், வடக்கிற்கு உடனடியாகத் தேர்தல் தேவை என்பதை அவர் உணர வேண்டும்.

வடக்குத் (20ஆம் பக்கம் பார்க்க)

## 80 பேருடன் சென்ற பேருந்து தடம் புரண்டதில் 50 பேர் காயம்



### வவுனியாவில் சம்பவம்

(பூந்தோட்டம்)

வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு நோக்கி சுமார் 80 பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்து தடம் புரண்டதில் 50 பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு மூன்று பேர் ஆபத்தான நிலையில், அனுராதபுரம் மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த கோர விபத்துச் சம்பவம் வவுனியா சாந்தசோலை (20ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளால் பிடிக்கப்பட்ட சிறை அதிகாரிகள் மீட்பு!

### வவுனியாவில் சம்பவம்

(கொழும்பு)

வவுனியா சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளால் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டிருந்த சிறை அதிகாரிகள் மூவரும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை முதல் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டிருந்த இம் மூன்று அதிகாரிகளையும் படைத்தரப்பு, விசேட அதிரடிப் படை மற்றும் பொலிஸாரின் கூட்டு நடவடிக்கை மூலம் மீட்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

சிறை அதிகாரிகளின் தாக்குதலுக்குள்ளான நிலையில் வவுனியா சிறைச்சாலையிலிருந்து மாற்றம் செய்யப்பட்ட சக கைதியை விடுவிக்கக் கோரி தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன், சிறை அதிகாரிகளினால் (20ஆம் பக்கம் பார்க்க)

## குழந்தையை பணயம் வைத்து 50 பவுண் நகைகள் கொள்ளை

### அதிர்ச்சியில் கோப்பாய் மக்கள்

(யாழ்ப்பாணம்)

வீட்டின் முன்பக்கக் கதவினை கோடரியால் வெட்டி உடைத்து உள்நுழைந்த திருடர்கள் இரண்டு வயது குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து வீட்டில் இருந்தவர்களை எச்சரித்த தோடு, சுமார் 50 பவுண் நகைகள், 2 கணனி, ஒருதொகை பணம் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கோப்பாய் ராச பாதை வீதியிலுள்ள வீட்டில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;

குறித்த வீட்டினுள் நள்ளிரவு வேளை நுழைந்த முகமூடி அணிந்த திருடர்கள் கூரிய ஆயுதங்களை காட்டி அங்கிருந்தவர்களை எச்சரித்துள்ளனர்.

அத்தோடு வீட்டின் உரிமையாளரின் மருமகனை அடித்தும் உள்ளனர்.

இவர் யாழ்ப் (19ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகளுக்கான நியமனம் திங்களன்று வழங்கப்படும்!

### யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே, கடந்த ஜூன் மாதம் 5ம்,6ம்,7ம் திகதிகளில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபட்டதாரிகளுக்கானநேர்முகப்பரீட்சைக்கு சமுகமளித்தோரில் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 திகதிக்கு முன்பதாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றவர்கள், வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றாயின் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமென சான்றிதழ் சமர்ப்பித்தவர்கள் அனைவரையும் மேற்படி நிகழ்வுக்கு சமுகமளித்து, தமது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும், (20ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்திற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் இணையம் (FUTA) மேற்கொண்ட முடிபை ஏற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்விசார் ஊழியர்களும் எதிர்வரும் 4ஆம் திகதி தொடக்கம் தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதென யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

- இலங்கை பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்கள் ஒரு விசேட வகையினராகக் கருதப்படல் வேண்டும்.
- அரசினால் உயர்கல்விக்கு செலவிடப்படும் நிதி மொத்தத் தேசிய உற்பத்தியில் குறைந்தது 6 சதவீதமாகவாவது உயர்த்தப்படல் வேண்டும்.
- அத்துடன் இலவசக் கல்வி தொடர்பான கொள்கை பற்றி அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி தெளிவான ஒரு விளக்கத்தை அரசு தரவேண்டும். ஏனெனில் அரசு தற்பொழுது உயர் கல்வியைத் தனியார்மயமாக்கும் செயற்பாட்டில் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.
- அத்துடன் உயர்கல்வி தொடர்பான சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் போது எல்லாப் பங்குதாரர்களையும் பொதுமக்களையும் உள்ளடக்கிய முறைமையான ஒரு ஆலோசனைச் செயன்முறை ஒன்றை உருவாக்கும் வரை தற்போது நடைமுறையிலுள்ள உயர்கல்விச் சீர்திருத்த செயன்முறைகள் அனைத்தையும் இடைநிறுத்த வேண்டும்.
- இலங்கைப் பல்கலைக் கழகங்களை அரசியல் மயமாக்குவதையும் அவற்றை நுண்முகாமைத்துவம் செய்வதையும் நிறுத்தி பல்கலைக்கழகங்கள் சுயாதீனமான நிறுவனங்களாக எழுச்சி பெற்று இலங்கையின் அபிவிருத்தியில் ஊக்கிகளாக தொழிற்பட அனுமதிக்க வேண்டும்.
- மற்றும் 07.07.2011 இல் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால பிரேரணையில் குறித்துரைக்கப்பட்ட சம்பளப்படியை நடைமுறைப்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்துள்ளனர்.

இதன் அடிப்படையில் கல்விசார் ஊழியர்கள் விரிவுரைகள் நடத்துதல், கூட்டங்களில் பங்கு கொள்ளல், ஆய்வுகளை மேற்பார்வை செய்தல், க.பொ.த. உயர்தரப் பரீட்சை சம்பந்தமான கடமைகளில் ஈடுபடல் போன்ற அனைத்து கல்விசார் மற்றும் துறைத்தலைவர், பீடாதிபதி, இணைப்பாளர்கள், பணிப்பாளர்கள் போன்ற தொண்டு அடிப்படையிலான அனைத்துக் கடமைகளில் இருந்தும் இக்கோரிக்கைகள் நிறைவேறும் வரை விலகி இருக்கதீர்மானித்துள்ளதாக யாழ். பல் கலைக் கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஏ)

## பொன்சேகாவின் கட்சி போட்டியிடாது

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் தனது ஜனநாயக கட்சி போட்டியிடமாட்டாது என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியுள்ளார். நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

ஜனநாயக கட்சி எனும் புதிய அரசியல் கட்சிக்கு சரத் பொன்சேகா தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# இனவாத செயல்களுக்கு எதிராக தமிழ், முஸ்லிம் சமூகம் இணைய வேண்டும்

## ஐ.தே.க அமைப்பாளர் வலியுறுத்தல்

நாட்டில் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமை எதிர்காலத்தில் வலுப்பெற வேண்டும். இரண்டு சமூகமும் பழைய சம்பவங்களை மறந்து புதிய சிந்தனையில் ஒன்று சேர வேண்டும்.

பேரினவாதத்தின் இனவாத, மதவாத செயல்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்து போராட முன்வரவேண்டும். முஸ்லிம் இளைஞர்களும், தமிழ் இளைஞர்களும் ஒன்று சேர்ந்து சமூகத்தின் சுதந்திரத்திற்காகப் பாடுபட வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசிக் கட்சியின் சமாந்துறைத் தொகுதி பிரதம அமைப்பாளர் எம்.ஏ. ஹசன் அலி இணையதளம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

முஸ்லிம் தலைமைகள் என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முஸ்லிம் மக்களுக்காகவே போராடத் தயக்கம் காட்டுகின்றார்கள். இவர்களா தமிழரின் போராட்டத்தில் பங்கு கொள்ளப் போகிறார்கள்? இவர்கள் அரசின் சலுகைகளுக்காக - அமைச்சுப் பதவிகளுக்காக அரசுடன் ஒட்டிக்கொண்டு மௌனமாக இருக்கின்றார்கள், சாப்பாட்டுக்கு மட்டும் வாயைத் திறக்கின்றார்கள் எனவும் இச் செவ்வியில் அவர் தெரிவித்தார்.

தமிழர் போராட்டத்தில் முஸ்லிம் தலைமைகள் பங்கேற்க வேண்டும் என்று மனோ கணேசன் கூறும் கருத்தை நான் வரவேற்கின்றேன். ஏனெனில் தமிழர்களும் முஸ்லிம்களும் சகோதரர்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஆனால் முஸ்லிம் தலைமைகள் என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளும் முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் மக்களுக்காகவே போராடத் தயக்கம் காட்டுகின்றார்கள். இவர்களா தமிழரின் போராட்டத்தில் பங்கு கொள்ளப் போகிறார்கள்?

வடக்கில் தமிழ் மக்களின் காணிகளும், கிழக்கில் முஸ்லிம் மக்களின் காணிகளும் அரசால் திட்டமிட்டுஅபகரிக்கப்படுகின்றது. வணக்கஸ் தலங்களுக்கு பேரினவாதத்தால் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. நாட்டில் மீண்டும் இனவாதத்தை, மத வாதத்தைத் தூண்டும் முயற்சியில் பேரினவாதம் முனைப்புக் காட்டுகின்றது.

இதேவேளை கிழக்கில் முஸ்லிம் முதலமைச்சர் வேண்டும் என்று முஸ்லிம் தலைவர்கள் கோஷம் எழுப்பி வருகின்றனர். ஆனால் இந்த முஸ்லிம் முதலமைச்சரை பங்காளிக் கட்சி இல்லாத பிரதான- தேசிய கட்சி ஒன்றினால் அதாவது ஐக்கிய தேசியக் கட்சியினால் தான் பெற்றுக்கொள்ள முடியும். இதனை முஸ்லிம் தலைமைகள் உணரவேண்டும். அதேவேளை, முஸ்லிம் மக்களும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே, முஸ்லிம் சமூகம் பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்க வேண்டும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் சாமாந்துறைத் தொகுதி பிரதம அமைப்பாளர் எம்.ஏ. ஹசன் அலி தெரிவித்தார் (எ-11)

# பட்டதாரிப் பிரதிநிதிகள் அரச அதிபருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பில் தம்மையும் இணைத்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்து யாழ். அரச அதிபரிடம் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகளினால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை நேற்று முற்பகல் 11.30 மணியளவில் சந்தித்து கலந்துரையாடிய உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் மாணவப் பிரதிநிதிகளினாலேயே இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

முன்னதாக யாழ். மாவட்ட செயலக வளாகத்தில் ஒன்று கூடிய பட்டதாரிகள் அரச அதிபருடன் சந்திப்பினை மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். இதன் பிரகாரம் பட்டதாரிகளின் பிரதிநிதிகள் சிலரை மட்டும் அனுமதித்த அரச அதிபர் மகஜரைப் பெற்றுக் கொண்டதோடு கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். (எ-6)

# பெறுபேறுகளை வெளியிட மாணவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 2011 ஆம் ஆண்டு பொதுக்கலை பட்டப்படிப்பினை முடித்த மாணவர்களின் நலன் கருதி பரீட்சைப் பெறுபேறுகளை உடனடியாக வெளியிட வேண்டும் என பாதிக்கப்பட்ட மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பட்டதாரிப் பயிலுநர் வேலை வழங்கும் திட்டம் தற்போது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் 2011 ஆம் ஆண்டு வரை பட்டம் பெற்று வெளியேறியோர் இவ் வேலைவாய்ப்பினைப் பெறும் தகுதியுள்ளவர்களெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ் பல்கலைக்கழகத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு 03 வருட பொதுக் கலைப் பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட மாணவர்களும் தகுதியைக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் வருட, 2ஆம் அரையாண்டுக்கான பரீட்சைகள் யாவும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முடிவடைந்த நிலையில், கலைப்பீடத்தின் ஒருசில துறைகளினால், பரீட்சைப் பெறுபேறுகள் 6 மாதங்கள் கடந்த நிலையிலும் வெளியிடப்படவில்லை.

இதனால் கடந்த 2011 இல் பொதுக்கலைப் பட்டப்படிப்பினை முடித்துக் கொண்ட மாணவர்கள் தமது பட்டச்சான்றிதழையோ(Degree) பட்டத்தகைமைச் சான்றிதழையோ (Statement) பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-6)

# கொழும்பில் பயிற்சி பெற்றவரே புனே குண்டுத் தாக்குதல் குற்றவாளி

இந்தியாவின் புனே நகரில் 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜேர்மன் பேக்கரி குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மிர்ஸா ஹிமாயட் பெய்க் என்பவருக்கு லக்ஷர் ஈ தொய்பா உறுப்பினர் என சந்தேகிக்கப்படும் பயாஸ் காக்ஸி, கொழும்பிலுள்ள முகாமொன்றில் பயிற்சி அளித்ததாக மஹாராஷ்டிரா மாநில பயங்கரவாத எதிர்ப்பு பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆட்சேர்ப்பு மற்றும் குண்டு தயாரிப்பு தொழில் நுட்பம் தொடர்பாக 2008 ஆம் ஆண்டு கொழும்பில் 3 வாரகால பயிற்சியை பெய்க்கிற்கு காக்ஸி வழங்கியதாக மாநில பயங்கரவாத எதிர்ப்பு பிரிவு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சியின் போது பெய்க்குடன் மற்றொரு நபரும் சமுகமளித்திருந்ததாக பி.ரி.ஐ செய்திச் சேவையிடம் மேற்படி அதிகாரி கூறினார்.

கொழும்பு நகரம் பாதுகாப்பானது எனவும் பாதுகாப்பு முகவரங்கள் எதுவும் சந்தேகம் கொள்ளப்படமாட்டாது என்பதாலும் இம்மூவரும் கொழும்பை தெரிவுசெய்தனர். அத்துடன் நாட்டை வந்தடைந்தவுடன் வீஸா வழங்கும் முறைமையை அப்போது இலங்கை கொண்டிருந்தது. இப்பயிற்சியின் பின்னர் எதிர்காலத்தில் தொடர்பில் இருப்பதற்கான தகவல் தொடர்பு வழிகள் குறித்து இவர்கள் தீர்மானித்தனர் என அவர் கூறினார்.

2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற புனே ஜேர்மன் பேக்கரி குண்டு வெடிப்பில் 17 பேர் கொல்லப்பட்டதுடன் 56 பேர் காயமடைந்தனர். அவ்வருடம் செப்டம்பர் மாதம் புனே நகரில் பெய்க் கைது செய்யப்பட்டார். (எ-11)






# மேர்வினின் காலடியில் முழந்தாளிட்ட நுளம்பு

(கொழும்பு)

தான் அண்மையில் சுகவீனமடைந்திருந்ததாகவும் அதேவேளை, பயங்கர நுளம்பு ஒன்று தனது காலடியில் முழந்தாளிட்டதாகவும் பொதுமக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் வேண்டுகோளைத் தொடர்ந்து கிரிபத்கொட மாவட்ட வைத்தியசாலைக்கு மேல் மாகாணசபையினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டி ஒன்று கையளிக்கும் வைபவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அண்மையில் நான் சுகவீனமுற்றிருந்தேன். சிலர் என்னால் இனி நடமாட முடியாது எனக் கூறித்திரிந்தனர். ஆனால் அது உண்மை அல்ல. எனது இரத்தத்தில் பிரச்சினை காணப்பட்டது. ஆனால் நான் சுகமடைந்துவிட்டேன். இறுதியாக பயங்கரமான நுளம்பு ஒன்று காலடியில் முழந்தாளிட்டது.

அண்மையில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து பலர் கல்வி அமைச்சரும் உயர் கல்வி அமைச்சரும் பதவி விலக வேண்டும் என கோருகின்றனர். அரசாங்கத்துக்கு வாக்களித்தவர்களுக்காக இவ்வாறு கேட்கும் உரிமை இல்லை.

நீதிமன்றம் தனது நடுநிலையான தீர்ப்பை வழங்கியுள்ளது. இது நீதித்துறை சுதந்திரமாக இயங்குவதை காட்டுகின்றது. இது ஐ.தே.க. காலத்தில் நடந்திருந்தால் நீதிபதிகளின் வீடுகளுக்கு கற்கள் வீசப்பட்டிருக்கும். ஜனாதிபதி இந்த நாட்டை ஜனநாயக முறையில் ஆட்சி செய்கின்றார். இதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார். (எ-11)

# இன்று ஒரு தகவல்

## தலைவர் ஆக தகுதிகள்...

என்னுடைய நண்பர் ஒருவர் இருந்தார். ஆழ்ந்த சிந்தனையிலே இருந்தார். என்ன யோசனை செய்கிறீர்கள்... என்று கேட்டேன். ''தலைவர் ஆக வரவேண்டும் என்று பார்க்கிறேன்...'' அதுதான் அதற்கு என்ன வழியென்று யோசிக்கிறேன்'' என்றார்.

“நான்கூட அதுமாதிரித்தான் யோசித்துப் பார்த்தேன்... அதற்குப் பின்னர்தான் யோசனையைக் கைவிட்டுவிட்டேன்'' என்றேன்.

“ஏன்?''என்று கேட்டேன்.

“அதற்கான தகுதிகள் எனக்கு இல்லையென்பது என்னைவிட மற்றையவர்களுக்கு அதிகம் புரிந்து விட்டது... அதனால் பேசாமல் சற்று கம்முன்னு இருந்து விட்டேன்'' என்றேன்.

“தலைவராக வருவதற்கு தகுதிகள் ஏதாவது உண்டா?''என்று கேட்டார்.

நான் உடனே என்னிடம் இருந்த ஒரு புத்தகத்தை எடுத்து அவரிடம் போட்டேன்– “படித்து பாருங்கள்''என்றேன்.

அப்புத்தகத்தில் 10 வழிகள் போட்டிருந்தார்கள். முதல் வழி என்ன தெரியுமா?

நான்கு பேருக்கு முன்னால் உரை நிகழ்த்தப் போகிறீர்கள். அப்போது எப்படி உரையை ஆரம்பிக்க வேண்டும். உண்மையான புகழ்ச்சி, நேர்மையான பாராட்டு... இதோட ஆரம்பிக்க வேண்டும். எடுத்ததுமே அது சரியில்லை... இது சரி இல்லை... என்று பேசிக்கொண்டு இருக்கக்கூடாது.

மக்கள் மீது பிழை இருந்தால் நேரடியாக சுட்டிக்காட்டக்கூடாது. அதை மறைமுகமாக... ஏதாவது கதை சொல்லி அதிலேயும் புரிந்து கொள்வது மாதிரி செய்ய வேண்டும்.

எதற்கும் நேரடியாக உத்தரவு போட்டுக்கொண்டு இருக்காதீர்கள். இதை நீங்கள் செய்ய வேண்டும்–என்று சொல்வதற்குப் பதிலாக “இதை இப்படி செய்தால் எப்படி இருக்கும்?'' என்ற கேள்வி மாதிரி கேட்க வேண்டும். இப்படியாக கேட்டால் அது உத்தரவு மாதிரி தோன்றாது மற்றவர்களின் மரியாதையை காப்பாற்றுவது மாதிரி பேச வேண்டும். உங்களின் பேச்சு மற்றவர்களை அவமானப்படுத்துவது மாதிரி இருக்கக்கூடாது.

ஒவ்வொரு சிறிய வளர்ச்சியையும் பாராட்ட வேண்டும். வெற்றி சாதாரணமாக இருந்தாலும் பாராட்டானது அமோகமாக இருக்க வேண்டும். குறை சொல்லும்போது கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் பேசுவது இன்னொருவருக்கு கௌரவத்தையும் மரியாதையையும் ஏற்படுத்துவது மாதிரி இருக்க வேண்டும். உங்கள் பேச்சைக் கேட்டால் கேட்பவர்களுக்கு ஒரு ஊக்கம் வர வேண்டும். உற்சாகம் பிறக்க வேண்டும்.

மற்றவர்களைச் சந்தோஷப்படுத்துங்கள். உங்கள் யோசனையைக் கேட்டு நடக்கிற மாதிரி அந்த சந்தோஷம் அமைய வேண்டும்.

இந்த தகுதியெல்லாம் இருந்தால், நீங்கள் ஒரு சிறந்த தலைவராகலாம்– என்று இந்தப் புத்தகத்தில் எழுதியுள்ளது.

இந்தக் காலத்திலே தலைவராக வருவதற்கு வேறு சில தகுதிகள் தேவைப்படுகிறது.

ஒரு பிள்ளை தனது அப்பாவிடம் போய்...

''அப்பா... உங்களை மாதிரியே நானும் அரசியலிலே சேர வேண்டும். தலைவராக மாற வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இன்றிலிருந்து எனக்கு அரசியல் பாடம் கற்றுத்தர வேண்டும்'' என்றான்.

அவரும் ''சரி''யென்று சொல்லிவிட்டு ஒரு பெரிய ஏணியை எடுத்துக் கொண்டு வந்தார். ஒரு சுவரிலே சாத்தினார். ''இந்த ஏணியிலே ஏறி உயரே போய் பரணிலே இருக்கும் புத்தகத்தை எடுத்து வா!''என்று மகனைச் சொன்னார்.

“அப்பா... ஏணி மிகவும் உயரமாக இருக்கிறது. நீங்கள் இதை கவனமாகப் பிடித்துக் கொள்ளுங்கள். நான் ஏறிப்போகிறேன்'' என்றான் மகன். ''பயப்படாதே... நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்றார் அப்பா.

மகன் ஏணியில் ஏற ஆரம்பித்தான். உச்சிக்குப் போனதும் அப்பா கையை எடுத்து விட்டார். ஏணி சரிந்து, அவன் பொத்தென கீழே விழுந்தான். இடுப்பை முறித்துக்கொண்டேன் என்று எழுந்தான்.

''என்னப்பா இது... இப்படி என்னை ஏறவிட்டு கையை விட்டு விட்டீர்கள்''என்று கத்தினான்.

அப்பா நிதானமாகச் சொன்னார்; ''அவசரப்படாதேப்பா... அரசியலிலே இதுதான் முதல்பாடம்! பெற்ற அப்பனாக இருந்தாலும்; அவனை நம்பாதே!'' என்று உபதேசம் செய்தார் தந்தையார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# திருவிழாவுக்கு தயாராகிறது மடுத்திருப்பதி

(மன்னார்)

மடுத்திருப்பதியின் ஆடி மாதத் திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டி கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவ நாட்கள் ஆரம்பமாகி தினமும் ஆராதனைகள் இடம்பெற்று வருகிறது. எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நற்கருணை பெருவிழா நடைபெறும். அன்றையதினம் காலை 6 மணிக்கு தமிழில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

அன்றைய தினம் மாலை வழிபாடுகள் மாலை 6.15 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். அதனை தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நற்கருணை பவனி இடம்பெற்று ஆசீர்வாதம் நடைபெறும்.

மறுநாள் திங்கட் கிழமை காலை 6.15 மணிக்கு சிலாப மறைமாவட்ட ஆயர் மேதகு வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை, கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை, மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இரா.யோசப்பு ஆண்டகை ஆகியோர் இணைந்து பெருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுப்பர்.

அதனைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச் சுருவப் பவனி இடம் பெற்று ஆசீர்வாதம் நடை பெறும்.

யாத்திரிகர்களின் வசதி கருதி போக்குவரத்து ஒழுங்குகள், தண்ணீர் வசதிகள், சுகாதார வசதிகள் ஆகியவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

எனவே, இப்புனித தலத்திற்கு யாத்திரிகர்களாக வருவோர் மரியாதையாகவும் கண்ணியமாகவும் நடந்து கொள்ளும்படியாகவும் மரியாதைக்குரிய ஆடைகளை அணிந்து வருமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மிதிவெடி அபாயங்கள்இன்னும் இப்பகுதியில் இருப்பதால் காட்டுப் பகுதிக்குள் செல்வதும் மரங்களை வெட்டுவதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப் படுகிறது. (அ-2)

# பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த 2012.06.06, 2012.06.07 ஆகிய திகதிகளில் நடைபெற்ற பட்டதாரிப் பயிலுநர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவர்களில் 2012 ஆம் ஆண்டு பட்டம் பெற்றவர்களுக்கான (இந்தியாவில் பட்டம் பெற்றவர்கள் தவிர) நியமனம் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாஸன் அறிவித்துள்ளார்.

தகுதியானவர்கள் அனைவரையும் தவறாது வருகை தந்து தங்களுக்குரிய நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

**HNDA** பட்டதாரிகள் தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 90 | 80-100 | 110 | 90 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 250 | 180 |
| தக்காளி | 130 | 140 | 150 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | -- | 100 | 90 | 80 |
| கரட் | 100 | 140 | 130 | 160 |
| பூசணி | 80 | 50 | 50 | 60 |
| புடோல் | 60 | 60 | 65 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 80-100 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 110 | 120 | 90 |
| பாகற்காய் | 120 | 120 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 90 | 90 | 100 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | 100 | -- |
| பயற்றங்காய் | 130 | 100 | 160 | 80 |
| லீக்ஸ் | 140 | 160 | 150 | 160 |
| பீற்றூட் | -- | 60 | 60 | 90 |
| கறிமிளகாய் | 130 | 170 | 170 | 170 |
| முருங்கைக்காய் | 130 | 100 | 200 | 120 |
| போஞ்சி | -- | 170 | 150 | 180 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | 90 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 25 | 15 |
| தேசிக்காய் | 120 | 90 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 30 | 20 | 18-20 |

# இராசி பலன்

*30.06.2012*
*(ஆனி 16, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு*
*ஏகாதசி முற்பகல் 10.06 மணிவரை*
*விசாகம் முன்னிரவு 9.26 மணிவரை*
*இராகுகாலம் 8.56-10.26 மணிவரை*
*சுபநேரம் 2.56-4.26 மணிவரை*
*சயன ஏகாதசி விரதம்.*

**மேடம்** குழப்பங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், உற்றார், உறவினர் வழியில் சுப விரயங்கள் அதிகரிக்கலாம், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, போசன சுகமுண்டு, பிரயாண பயமுண்டு.

**இடபம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுப்பீர்கள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், உறவினர் வருகையுண்டு, தொழில் முன்னேற்றமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், உடல் நலம் சீராகும், வீட்டை பராமரிப்பத்தில் ஆர்வம் காட்டுவீர்கள், கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், கௌரவமான நாள்.

**கடகம்** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கல்வி முன்னேற்றம் கருதி ஒரு தொகையை செலவு செய்யும் சூழ்நிலை அமையலாம்.

**சிங்கம்** தாய் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு, வங்கிகளில் வைப்பினை உயர்த்தும் எண்ணம் உருவாகும், வாகன சுகமுண்டு.

**கன்னி** சுப முயற்சிகள் மூலம் சுகம் காண வேண்டிய நாள், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்ய வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும்.

**துலாம்** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.

**விருச்சிகம்** குடும்ப உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆழ்ந்த சிந்தையுண்டு, நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், சயன சுகமுண்டு, பணவரவு திருப்தி தரும்.

**தனுசு** பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உணர்ச்சி வசப்படும் நிலை ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மகரம்** பெரிய மனிதர்களின் தொடர்பு உங்கள் தகுதியை உயர்த்தும், தனவரவு திருப்திகரமாக அமையும், சுப செய்திகள் வந்து சேரும் நாள், கௌரவமான நாள்.

**கும்பம்** தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழிலில் அதிக பிரயாசை எடுப்பீர்கள், உற்சாகமான நாள்.

**மீனம்** ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், உடல் உழைப்பு அதிகரிக்கும், விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள்.

வளவன்





போசாக்கு தினத்தை முன்னிட்டு நிலையான வாழ்வுக்கு நிறைவான போசாக்கு என்னும் தொனிப்பொருளில் யாழ். மாநகராட்சி மன்றத்தின் சுகாதாரப் பிரிவின் ஏற்பாட்டில் நல்லூரில் உள்ள நாவலர் மண்டபத்தில் விழிப்புணர்வுக் கண்காட்சி ஒன்று நேற்று நடத்தப்பட்டது. இந்தக் கண்காட்சியை யாழ். மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நாடாவெட்டி திறந்து வைப்பதையும் சிறார்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த காட்சிப் பொருட்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

## இந்து சமய ஆலோசனை சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இந்து சமய ஆலோசனை சபைக்கூட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற பணி மனையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டம் தொடர்பாக கடந்த 16 ஆம் திகதி அங்குரார்ப்பணக்கூட்டமொன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பற்றி விவாக ஆராயும் பொருட்டே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்நிகழ்விற்கு யாழ்ப்பாணத்திலுள்ள சிவாச்சாரியர்கள், ஆலய தர்மகர்த்தாக்கள், சோதிடர்கள் ஆகியோரை பங்கேற்று ஆலோசனைகளை வழங்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் கேட்டுக் கொள்கின்றது. (அ-2)

# தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை அரசாங்கம் சீர்குலைத்துள்ளது

## பொது எதிர்க்கட்சிகளின் கூட்டணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வடமாகாணத்திற்கு தேர்தல் நடத்தாததன் மூலம் நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் நோக்கில் ஏற்படுத்தப்படவிருந்த உத்தேச நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை அரசாங்கம் மீண்டும் சீர்குலைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான பொது எதிர்க்கட்சிகளின் கூட்டணி குற்றம் சுமத்தியுள்ளது.**

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபைத் தேர்தலை முதலில் நடத்தி அங்குள்ள மக்கள் தாம் விரும்பிய வகையில் மாகாண சபையை ஏற்படுத்திக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்காது அரசாங்கத்திற்கு எதிராக ஏற்பட்டு வரும் மக்களின் மனநிலையை திசை திருப்புவதற்காக கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்த கட்சிகளின் தலைவர்கள் கூறியுள்ளனர்.

வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதது குறித்து அவர்கள் கடும் எதிர்ப்புகளை வெளியிட்டனர். வட மாகாண சபைத் தேர்தலை நடத்தப்போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல சந்தர்ப்பங்களில் வாக்குறுதியளித்திருந்தார் என்பதையும் கட்சித் தலைவர் நினைவூட்டினார்.

அவ்வாறு வடமாகாண சபைத் தேர்தலை நடத்தியிருந்தால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா மனித உரிமை பேரவையின் கூட்டத்தை வெற்றிகரமான முறையில் எதிர்கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும் என்றும் பொது எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கில் முதலில் தேர்தலை நடத்துவதில்லை என்று அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் காரணமாக மனித உரிமைப் பேரவையில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

வடமாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறும் மக்களுக்கு ஊதியத்தை அதிகரித்து நிவாரணங்களை வழங்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் வலியுறுத்தி அரசாங்கத்திற்கு எதிராக பொது எதிர்க்கட்சிகள் நடத்த தீர்மானித்துள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். (அ-2)

# பொதுவான எதிர்க்கட்சி ஒன்றின் அவசியம் எழுந்துள்ளது

## ஐ.தே.க. வ்லியுறுத்து

(கொழும்பு)

பொதுவான எதிர்க்கட்சி ஒன்றின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்களில் அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டுமாயின் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

சுதந்திரமானதும் நீதியானதுமான முறையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். நாட்டின் பொருளாதாரம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

இந்தச் சிக்கல்களிலிருந்து மக்களை திசை திருப்பும் நோக்கில் அரசாங்கம் அவசரமாக தேர்தல்களை நடத்துகின்றது.

18 ஆம் திருத்தச் சட்டமூலம் அமுலில் இருக்கும் வரையில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல் என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

போலியான முறையில் தேர்தல்களில் வெற்றியீட்டி அதன்மூலம் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதே அரசாங்கத்தின் திட்டம்.

பெருமளவிலான மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கி வரும் தருணத்தில் அரசாங்கம் பொதுமக்கள் பணத்தை விரயம் செய்து வருகின்றது என்றார். (அ-2)

# கனேடிய அரச பிரதிநிதியுடனான சந்திப்பு ஸ்காபரோ நகரில்

## கனேடிய மனிதவுரிமைகள் மையம் ஏற்பாடு



இலங்கைக்கு கனேடிய அரசின் சார்பாக உத்தியோக பூர்வமாகச் சென்று வந்தவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் றிக் டயஸ்ரா தமிழ்மக்களைச் சந்திக்கும் ஏற்பாடொன்றை கனேடிய மனிதவுரிமை மையம் மேற்கொண்டுள்ளது.

கனேடிய அரசின் சார்பில் கடந்த மார்ச் மாதம் இலங்கை சென்று வந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு செனட்டர் அடங்கிய குழுவினர் இலங்கை தொடர்பாக கனடாவின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான பரிந்துரை அறிக்கை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பெரும்பான்மை அரசாக தற்போதைய கனேடிய அரசு இருப்பதால் இந்தப் பரிந்துரைகள் ஏற்கப்படும் என எதிர்க்கப்படுவதோடு அப்படி அப்பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும் போது அடுத்து வரும் சில வருடங்களிற்கு இலங்கை அரசின் உறுதிமொழிகள், இன சமத்துவக் கொள்கைகள் என்பன தொடர்ச்சியாக கண்காணிக்கப்படும் எனவும் தெரியவருகிறது. தங்களது இந்தப் பயணம் தொடர்பான எந்தவொரு பத்திரிகையாளர் சந்திப்பையோ அல்லது பொதுமக்கள் சந்திப்பையோ இன்னமும் மேற்கொள்ளாத நிலையில் தமிழ்மக்கள் அதிகம் வாழும் ஸ்காபரோ நகரில் இந்தச் சந்திப்புக்கு கனேடிய மனிதவுரிமை மையம் ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 10ஆம் திகதி கிங்ஸ்டன் வீதியில் அமைந்துள்ள குயாஸிஸ் மண்டபத்தில் மாலை 7 மணிக்குஇடம்பெறும் இச்சந்திப்பில் பொதுமக்களையும் பத்திரிகையாளர்களையும்கலந்துகொள்ளுமாறு கனேடிய மனிதவுரிமை மையம் கேட்டுள்ளது. (அ-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சிப் பிரதேசத்தில் 17 வர்த்தர்களுக்கு ஒரு இலட்சத்து இரண்டாயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளினால் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்தமை, விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமல் பொருட்களை விற்பனை செய்தமை தொடர்பாகவே மேற்படி வர்த்தகர்கள் பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி வர்த்தகர்கள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் ஒருவருக்கு தலா 6 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

(கரவெட்டி)

வடமராட்சிப் பிரதேசத்தில் 25 வர்த்தகர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

மதுவரித்திணைக்கள அதிகாரிகளினால் வர்த்தக நிலையங்களினை சோதனையிட்ட போது சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேற்படி வர்த்தகர்கள் பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் ஒருவருக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (அ-9-24)


# அறிவித்தல்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!


வீதி மூடப்பட்ட போதிலும்

எமது நிறுவனத்தின் சேவைகள் அனைத்தும் வழமை போல் அதே இடத்தில் நடைபெறுகின்றன.

திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே:-021 222 7835

(சீ-359)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### பன்னிரண்டாம் திருவிழா

### அலைகடல் நாயகியே அருளுமம்மா!

ஊர்க் கோயில் பல சென்றேன் –என்
உளமது ஆறவில்லை– நயினை
பதிதனை நினைத்திடவே –என் உளமது சாந்தமம்மா
அலைகடல் நடுவில் அரவக்
குடையின் கீழ் இருந்து அருளாட்சி
செய்யும் தாயே அலையும் –எம்
மனதில் அமைதியைத் தாருமம்மா
சீர்கள் பல பெற்றிடவே சிந்தையில்
உனை நினைத்தேன் சின்னத்தன சிந்தனையை –எம்
சிரசிருந்து அகற்றுமம்மா–நயினை தாயே

சு.பிரதீஸ்
உரும்பிராய் மேற்கு

### பாராளும் தேவியே

அகிலம் ஆளும் ஆதிசக்தியே ஆழ்கடலருகே உறைபவளே
கடல் கடந்து ஊர் வருவார் கழல் அடிகள் தொழுவே
பாம்பணையில் வீற்றிருக்கும் பாராளும் தேவியே
பரந்தாமனுக்கு சோதரியே பராசக்தி தாயே

கு.சசிகலா
மட்டுவில் வடக்கு

### நாடி வருவேன் நாயகியே

நாடி வருவேன் நயினை நாயகியே
நலம் அருளும் நாக பூசணியே
தஞ்சமென வந்து நானும் உன்
தாள் பணிந்து நின்றிடவே
கொஞ்சு தமிழ் பாடி உனைக்
கெஞ்சி நின்ற வேளையிலே
பஞ்சமில்லை என் அருளுக் கென்று
பார்த்தாயே பங்கயம் மலர்ந்தது போல்

மல்லை கலா

### அற்புதத் திருவுருவம்

நயினையம் பதியில் உறைந்திருக்கும் நாகேஸ்வரியே
நாகம் பூ கொண்டு வணங்க
உன் அற்புதத் திருவுருவைக்காண
பக்தர் கூட்டம் கடலில் அலைமோதுதம்மா
உன் எழில் உருவைக் காண
ஆயிரம் ஆயிரம் கண்கள் வேண்டுமம்மா ஈஸ்வரியே
எங்கும் உன் புகழ் சூழ அம்பிகையே
சரணம் சரணம் சரணமம்மா

வ.பவளகேசி
யாழ்ப்பாணம்

## 13 மாவட்டங்களில் கடும் வரட்சி

மழை வீழ்ச்சி இன்மையால் நாட்டின் 13 மாவட்டங்களில் கடும் வரட்சி நிலவுவதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அம்பாறை, குருநாகல், நுவரெலியா, கண்டி, கேகாலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, பொலநறுவை, அநுராதபுரம், மன்னார், மொனராகலை மற்றும் புத்தளம் போன்ற மாவட்டங்களிலேயே கடும் வரட்சி நிலவுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் மேற்படி மாவட்டங்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மாவட்ட ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ–2)

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(மாங்குளம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனுமதியுடன் ஜேர்மன் அபிவிருத்தி நிறுவனமானது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் DETA திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதனது இரண்டாவது கட்ட தொழில் பயிற்சிக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கினை எதிர்வரும் ஜுலை மாதம் 4,5 ஆம் திகதிகளில் வட்டக்கச்சி, புதுமுறிப்பு, பெரிய குளம் ஆகிய பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 150 இளைஞர், யுவதிகளுக்கு நடத்தவுள்ளது.

மேற்படி கருத்தரங்கு கிராமத்தின் பொதுநோக்கு மண்டபங்களில் நடைபெறும். அத்துடன் இத்திட்டத்தின் முதலாவது கட்டம் கடந்த 26, 27 ஆம் திகதிகளில் தர்மபுரம், உளவனூர், நாதன் குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட 150 இளைஞர், யுவதிகளுக்கு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2-261)

## அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம்

(கரவெட்டி)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-9-24)

## குளிர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஆனி மாத பூரணைக் குளிர்த்தி விழா எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 12 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் அடியார்கள் தங்கள் பொங்கல் நேர்த்தியினை செய்து கொள்ள முடியுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். (அ–2)

### அம்மா நீ அருள் புரியாயோ

நாடு செழிப்புறவே அம்மா–நீ நாக தீவில் குடி கொண்டாயோ!
தேடி உனை வந்தோருக்கு வெள்ளமுது கொடுத்தாயோ
நாடி உனை வந்தோருக்கு நல்லருள் புரிவாயோ!
அலைகடல் மீது அமர்ந்து – அம்மா நீ எமக்கு அருள் புரியாயோ

த.கயூதரன்
நாவற்குழி

### எல்லாம் நயினைத் தாயே

மீன்கள் எல்லாம் பூவாகி நீந்துதங்கே
அலைகள் எல்லாம் பன்னீராய் தூவுதங்கே
ஓடம் எல்லாம் தேர்களாய் மிதக்குதங்கே
நயினைத்தாயே எல்லாம் உன் புதுமையங்கே!
ஊர் எல்லாம் வடம்பிடிக்க வருகுதங்கே
உள்ளம் எல்லாம் பேருவகை கொண்டதங்கே
அரோகரா எல்லாம் அபிசேக தீர்த்தமங்கே
பிரசாதம் எல்லாம் அருள்வழங்கும் நிதமுமங்கே!
வான் எல்லாம் ஒளியாகி தேவர்களங்கே
கடல் எல்லாம் தலையாகி அடியார்களங்கே
உடல் எல்லாம் கண்ணாகி அருளொளியங்கே
எல்லோர்க்கும் எல்லாம் நயினைத்தாயே அங்கே!

கல்வளை
ஜெயமதிலி

### வரமது தந்து வாழ்வளிப்பாயம்மா

உலகமுண்டோன் சோதரியே உலகிற்கு நாயகியே
உயிர்க்குயிராய் உறைபவளே நாகபூஷணி யம்மையே!
உலகாளும் உமையவளே உன்பாதம் தினம் பணிந்து
உன் புகழைகேட்டு உள்ளமெல்லாம் குளிருதம்மா
குலவிளக்காய் நின்றென்றும் காலுதலை நோகாமல்
குடிகளைக்காப்பவளே கருணைமிகக் கொண்டவளே
சிலம்புடன் சென்ற கணவன் புலம் பெயர்ந்திட்டாரென்ற
சேதி கேட்டு வீறு கொண்ட கண்ணகைத்தாயாரே
வலம் வரும் எம் சோக வாழ்வினை நீக்கி
வரமது தந்து வாழ்வளிப்பாயம்மா!

கலாபூஷணம் மு.தணிகாசலம்
கற்கோவளம்

### அருள்புரி அன்னையே

துன்பம் அடையினும் செய்த தீவினைத்
தொடர்பினை நினைத்திலர் அங்கோ!
இன்பம் ஒன்றையே குறியெனக் கொண்டோர்
எதையும் செய்யவே முனைவார்
சொன்ன மறையுரை சோர்ந்தார் படித்தும்
சோதி நெறியினை நாடார்
அன்னை உன்னருள் ஆணையில் நடக்க
அருள்புரி நயினாதீவு நாகபூசணியே!

புலவர் செ.பரமநாதன்
மண்டைதீவு

### உலகம் போற்றும் நாயகி

நயினையில் கோயில் கொண்டவளே
நலம் தந்து எம்மை காப்பாயே!
கயிலையில் காட்சி தருபவளே–எங்கள்
கஷ்டங்களை தீர்த்து அருள்வாயே
பாம்பும் வணங்கும் தாயவளே
பக்தர் குறைகள் தீர்ப்பாயே!
உலகம் போற்றும் நாயகியே
உயிர்களை என்றும் காப்பாயே

த.கேமராஜி
யாழ்ப்பாணம்

ராம்கோ சீமெந்து

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்
ஈஸ்வர பகவான் அன் கம்பனி
தொ. பே: 021 222 7603, 021 222 2350
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## துணுக்காயில் தொழிற்சாலை அமைப்பு மக்கள் விசனம்

(மல்லாவி)

இந்திய அரசின் அனுசரணையுடன் நடைபெறும் வீதித்திருத்த வேலைகளுக்கான காப்பெற் தார்க்கலவை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று துணுக்காய் மக்கள் குடியிருப்பு பகுதியில் அமைக்கப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மக்கள் செறிந்து வாழும் துணுக்காய் நகரப் பகுதியை அண்மித்த இடத்தில் இத் தொழிற்சாலை அமைவதால் இதிலிருந்து வெளிவரும் தூசுகள், புகை என்பன இப்பகுதி குடியிருப்பாளர்களையும் பாடசாலை மாணவர்களையும் சுகாதார ரீதியாக பாதிப்பதுடன் தமது விவசாய நடவடிக்கைகளையும் பாதிப்பதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இதனை தடுத்து நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கையொன்றை முன்வைக்கின்றனர். (அ-9-15)

# வவுனியா கைதிகள் தொடர்பில் அதிகாரிகளிடம் கரிசனை வேண்டும்

(கொழும்பு)

கைதிகள் சிறையில் இருந்து வேறு சிறைக்கு மாற்றுவது குறித்தும் அக்கைதிகளை தெளிவு படுத்தவதும் அது தொடர்பாக அறிவிக்கவும் அவசியம் வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள துரதிஷ்ட நிலை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர் என்ற ரீதியிலும் நான் கவலை அடைகின்றேன்.

இந்த நிலைமையை சீர்ப்படுத்த மனிதாபிமான கண்ணோட்டத்துடன் அரச அதிகாரிகள் செயற்பட வேண்டும். இந்த சிறைக் கைதிகளின் மனோ நிலை தொடர்பில் அதிகாரிகளின் கவனம் திரும்ப வேண்டும்.

சட்டத்தில் இடமில்லாதிருந்தால் அக் கைதிகளிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது சிறந்ததாகும். விசேடமாக தேசிய பிரச்சினைக்கு சிறந்த தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இச் சந்தர்ப்பத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் கிரமம் கிரமமாக புனர்வாழ்வளிக்கப்பட்டுவரும் நிலையிலும் சிறைச்சாலைகளிலுள்ள கைதிகள் மீது கருணை உள்ளத்துடன் அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எமது சிறைச்சாலை எண்ணக்கருவான *சிறைக்கைதிகளும் மனிதர்கள்* என்பது வெறும் சொற்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தாது செயற்பாட்டிலும் காண்பிக்க வேண்டும். கைதிகள் தொடர்பான நடவடிக்கைளில் அதிகாரிகள் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். ஆவேசப்பட்டு எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாது.

சிறைச்சாலைகளிலுள்ள அனைத்து சிறைக் கைதிகளினதும் பாதுகாப்பு, சுகாதாரம், உரிமை என்பனவற்றை பாதுகாக்க பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மனித உரிமைகள் நடவடிக்கைகளுக்கு பொறுப்பானவர் என்ற ரீதியில் நான் எந் நிலையிலும் முன்நிற்பேன்.

வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை சீர்படுத்தும் முயற்சிகளில் மகா நாயக்கர்கள் மற்றும் சர்வமதத் தலைவர்களினதும் தலையீடுகள் அவசியம் என வலியுறுத்துகின்றேன்.

கைதிகளின் ஆவேச நிலையை எம்மால் அனுமதிக்க முடியாத போதிலும் அது தொடர்பில் சமாதான கருணை கண்ணோட்டத்துடன் புத்திசாதுரியமான தீர்மானங்களை பொறுப்புடன் அரச அதிகாரிகள் எடுக்க வேண்டும். எமது நாட்டின் நற்பெயரை பாதுகாக்கவும் தேசிய நல்லிணக்கத்தை மூவின மக்களிடையே ஏற்படுத்தவும் இந்தச் சந்தர்ப்பம் முக்கியம் வாய்ந்ததாகும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# யாழில் தற்கொலை மரணங்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ள தற்கொலை மரணங்கள் கடன் சுமைகளினால் இடம்பெறுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தி அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவ்வருட முற்பகுதியில் மட்டும் 30 இற்கும் மேற்பட்ட தற்கொலை மரணங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இவற்றில் ஆகக் குறைந்தது 10 மரணங்கள் கடன் சுமைகளால் இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,கடன் வாங்குவோர் ஏதோ ஒரு வகையில் கூடுதலாக நஷ்டமடைகின்றனர். குறிப்பாக தொழில் தொடர்பாகவோ குடும்பச்சுமை காரணமாகவோ வாகனங்கள் கொள்முதல் மூலமாகவோ இது ஏற்படுகிறது.

இதனால் பெற்றுக்கொண்ட பெருந்தொகையான கடன்களை எப்படி செலுத்தி முடிப்பது என்று வேறு வழியில்லாமல் தற்கொலையை ஒரு தீர்வாக நாடுகின்றனர்.

சில தற்கொலைகளை நியாயப்படுத்த முடிகின்றதோடு பல தற்கொலைகள் சிறு விடயங்களை சமாளிக்க முடியாமல் நடைபெறுவது துரதிர்ஷ்டமானதே.

இதற்கு உளப்பாதிப்பே முக்கியம் பெறுவதோடு பொருளாதார சூழ்நிலையும் ஒரு காரணியாக அமைகின்றது. அண்மைக்காலங்களில் யாழில் திடீரென தற்கொலைகள் அதிகரித்து உள்ளன. இத் தற்கொலைகளை அதிகமாக இளைஞர்களே மேற்கொள்கின்றனர்.

தன்னிடமுள்ள பொருளாதார மட்டத்தினையும் தன் வீட்டின் பின்னணியினையும் பொருட்படுத்தாது இளம் வயதில் திருமணம் செய்துவிட்டு பின்னர் குடும்பத்தின் செலவினை தன்னால் சுமக்க முடியாத என்ற நிலையும் மூலதனம் ஒன்றினை தேடிக் கொள்வதற்காக பிறரிடம் அதிக வட்டி வீதத்தில் பணத்தினை கடனாகப் பெற்றுக் கொண்டமை என்பன காரணமாக அமைகின்றன.

சிலருக்கு சில வேளைகளில் இம்முயற்சி வெற்றி அளித்தாலும் அதிகமான நேரங்களில் இவர்கள் தோல்வியினையே தழுவிக் கொள்வார்கள்.கடன் சுமை இழப்புக்களில் பெண்களின் தற்கொலைகள் குறைவாகவே காணப்படுகின்றபோதும் தற்போது சட்டவிரோத கருக்கலைப்புக்களினால் பெண்களின் தற்கொலை வீதமும் அதிகமாகவே காணப்படுகின்றது.

தற்போது பொருட்களின் விலையேற்றம் அனைத்து மட்டங்களினையும் பாதிப்படையத்தான் செய்கின்றது.குறிப்பாக யாழ்.மாவட்டம் வாழ்க்கைச் செலவினங்கள் கூடிய மாவட்டங்களில் முதலிடமாக காணப்படுகின்றது.

இம் மரணங்கள் அதிகம் இடம்பெறும் போது அங்கு சமூக, பொருளாதார மட்டத்தில் ஏதோ ஒரு தவறோ அல்லது பாதிப்போ கட்டாயமாக இருக்கும்.நாம் அக்குறைகளை முதலில் கண்டறிந்து அதற்குரிய நிவாரணமளிக்க வேண்டும். தற்கொலைகள்தானே என நாம் அலட்டிக் கொண்டால் அது எம் சமூகத்திற்கு மிகப் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி விடும் என்றார். (அ-2-4)

## அதிபர் நியமனம்

(கரவெட்டி)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் புதிய அதிபராக மு.கனகலிங்கம் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் செல்லும் முன்னாள் அதிபர் மே. சிவசிதம்பரம் கடந்த 10 வருடங்களாக இக்கல்லூரியில் அதிபராக பணியாற்றியிருந்தார். இவரின் வெற்றிடத்தை நிரப்பவே மணற்காடு றோ.க.த.க.பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய மு.கனகலிங்கம் நியமிக்கப்படவுள்ளார். (அ-9-24)

# வடக்கில் சனத்தொகை வீழ்ச்சியானது தமிழ் மக்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும்

## சந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தற்போதைய சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கையின் படி வடக்கில் தமிழ் மக்களின் சனத்தொகையில் மிகப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது எமது சமூகத்தில் பாதகமான நிலைமையினையே தோற்றுவிக்கும் என பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள பாரதிபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

குடிசன மதிப்பீட்டு அறிக்கையின் படி யாழ்ப்பாணத்தின் சனத்தொகை இருபது சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளதோடு இலங்கையில் மிகக் குறைந்த சனத்தொகையை கொண்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகிறது.

முப்பது வருட யுத்தம் அதனால் ஏற்பட்ட புலம்பெயர்தல், இறப்பு உள்ளிட் பல்வேறு காரணங்களால் சனத்தொகையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு மாகாணத்தில் சனத்தொகை வளர்ச்சி வீதம் மிக தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகிறது. இதனால் எமது பிரதேசத்திற்கான அபிவிருத்திகளுக்கான ஒதுக்கீடுகள் முதல் பல்கலைக்கழக அனுமதிக்கான ஒதுக்கீடுகள் என பலதுறைகளில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது. எனவே எமது இனத்தின் சனத்தொகை தொடர்ந்தும் வீழ்ச்சி போக்கில் செல்ல விடாது பாதுகாக்க வேண்டும். இது ஒவ்வொரு குடிமகனதும் பொறுப்பாகும்.

இதேவேளை, பாரதிபுரம் கிராமத்தில் சேதமடைந்திருக்கும் பொது மண்டபங்களை புனரமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுவதோடு இரணைமடு சந்தைக்கு காணி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு விரைவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு சந்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வருட இறுதிக்கள் கிளிநொச்சி நகரை அண்டிய எல்லா கிராமங்களும் மின்சாரம் வழங்கப்படும். அது மாத்திரமன்றி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படவுள்ள பாரியளவிலான குடிநீர்விநியோகத் திட்டத்தின் மூலம் பெருமளவான பிரதேசங்களின் குடிநீர் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை காணமுடியும் என்றார். (அ-2)


ST. JOHN'S COLLEGE, JAFFNA
ANNUAL PRIZE GIVING 2012

Saturday 30th June 2012
at 10.00a.m.

Chief Guests:

The Lord Bishop Rt.Revd. Shantha Francis
Bishop of Kurunagalle

&


Mrs. Priyatharshini Francis

Chairman:
Ven S J Jeyaveerasingan
Archdeacon of Jaffna & Manager of the College

Parents, Old Boys & Well-wishers are
Cordially invited

Principal, Staff & students (சீ/361)

# தென்னையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 20-IV

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பல்லாண்டுத் தாவரம் என்னும் தகவு நிலைக்கு அப்பால் அனைவருக்கும் அனைத்தும் பயன்படும் மரமாக தென்னையை அறிவர். உள்ளெடுக்கும் நீரை இளநீராகத்தரும் ஆற்றலுடைய மரத்திற்குரிய பெறுமதி கனதியே.

மேலும் எமது சூழலுக்கு இயைவான சிறப்புக்குரிய ஒரு வித்திலைத் தாவரமாக இருப்பதுவும் அதனுடனிணைந்து கற்பகதருவான பனை மரத்தினது பயன்பாடும் இணைந்திருப்பதையும் ஒருமித்துப் பார்த்தால் எங்களுக்குரிய மரஞ் சார்ந்த வேளாண்மை (Tree based agriculture) இனது முக்கியத்துவத்தினுள் நாம் உள் ளீர்க்கப்பட்டிருக்கின்றோம் என்பதனை உணர்ந்து கொள்ளலாம்.



இதனையும் ஓரம்சமாக பிரேசில் நாட்டில் நடைபெற்ற Rio+20 விஞ்ஞான மாநாடு ஆராய்ந்துள்ளது.

உலகளாவிய ரீதியில் குடும்ப வேளாண்மை (Family Farming ) இனை மையப்படுத்தி இச் சிறுவிவசாயத்தை மேன்மைப்படுத்தலுக்கான வழிவகைகளையும் ஆராய்ந்திருக்கின்றது என்பது இங்கே சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும்.

தென்னை, பனை சார்ந்த வேளாண்மைக்கு நாம் இன்றும் முழுமையான தீர்வினை எட்டிவிடவில்லை என்பதுடன் அதனுடனிணைந்த மக்களின் வாழ்வாதார விருத்தியை அந்த பகுதி மக்களின் வேளாண்மை சார்ந்த அபிவிருத்தியுடன் சேர்த்து உற்று நோக்குவது சாலப் பொருத்தமாகும்.

அந்த வகையில் மரம் சார்ந்த வேளாண்மை இனது முதன்மைச் செயற்பாட்டுக்குரிய மரமான தென்னையினது விளைச்சலைப் பாதிக்கும் காரணிகளுள் அதிமுக்கியமான பீடைகளைப் பற்றி இக் கட்டுரைத் தொடரில் அலசி ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்.

இதுவரையில் வெட்டியுண்டு சேதத்தை ஏற்படுத்தும் பீடைகளான தென்னை காண்டாமிருக வண்டு மற்றும் நீள்மூஞ்சி வண்டு பற்றியதாக இருந்தது.

தொடர்ந்து ஏனைய பூச்சி மற்றும் சிற்றுண்ணி பீடைகளைப் பற்றி பார்ப்போம். தென்னையில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் முதன்மையான சேதத்தை தென்னை சிற்றுண்ணி ஏற்படுத்தியிருக்கின்றது.

### தென்னை சிற்றுண்ணி

தென்னை சிற்றுண்ணி (Coconut Mite) இனது தாக்கம் தென்னை வளர்ந்துள்ள இடங்களனைத்திலும் பரந்து காணப்படுகின்றது. இதற்கு ஏசேரியா குவரோறோனிசு (Acaria guerreronis)எனும் விலங்கியல் பெயர் வைத்துள்ளனர்.

மெக்சிக்கோ வில் 1965 களில் இனங்காணப்பட்ட தென்னை சிற்றுண்ணி பின்நாளில் இலத்தீன் அமெரிக்கா மற்றும் மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு பரவலடைந்து பின்பு ஆசிய கண்ட நாடுகளுக்குள் பரவ ஆரம்பித்தது. இறுதியில் இந்தியாவிலும் இலங்கையிலும் பரவிட்டது. வந்த வழி எவ்வழி என தெரியாவிட்டாலும் தென்னை சிற்றுண்ணியால் தேங்காய்களில் ஏற்படுத்தப்படும் சேதம் அதிகமே.

பாளையிலிருந்து வெளிவரும் பெண் பூக்கள் கருக்கட்டிய பின் உருவாகும் குரும்பையினுள் சிற்றுண்ணிகள் சென்று குரும்பையின் மேல் பகுதியில் விருத்தியாகும் பனுவலுக்கு கீழாக உள்ள மெல்லிய வெள்ளை நிற பகுதியில் உண்ண ஆரம்பிக்கும்.

இங்கே குரும்பையில் உள்ள குரும்பைக்கும் பனுவலுக்கும் இடையிலுள்ள இடைவெளி சிற்றுண்ணி உட்செல்ல ஏதுவாக இருக்கும்.

குறிப்பிட்ட சில தென்னை இனங்களில் இப்பகுதி மிகவும் இறுக்கமாகவும் குரும்பை வட்ட வடிவமாகவும் இருக்கும் போது சிற்றுண்ணியினால் உட்செல்ல முடியாதிருக்கும். இவ்வினங்களில் சிற்றுண்ணித்தாக்கம் இருப்பதில்லை.

சிற்றுண்ணிகளின் வெவ்வேறு பருவ நிலைகள் வளர்ந்து வரும் மெல்லிய இழையப் பகுதியில் விரைந்து சேதத்தை ஏற்படுத்துவதனால் சேதமாக்கப்பட்ட பகுதி வெள்ளை நிற நீண்ட முக்கோண வடி வில் வெளித்தெரியும்.

குரும்பைகளில் இவ்வாறான அடையாளத்தை காண்டால் சிற்றுண்ணித் தாக்கம் இருப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

குரும்பை தொடர்ந்து வளரும் போது சேதமாக்கப்பட்ட வளரும் பகுதி இறுக்கமாகி இருக்க ஏனைய இழையங்கள் தொடர்ந்தும் வளர்ந்து கொண்டேயிருக்கும் அனைத்து பகுதியும் ஒரு சீராக வளராத காரணத்தினால் வளரும் தேங்காய் சீராக இராது சுருங்கி கறுத்து வழமையான உருவத்தில் இருக்காது. தேங்காய் முற்றி வர சிற்றுண்ணி ஏற்படுத்தப்பட்ட சேதம் பெரிதாக கண்ணுக்கு புலப்படும்.

இந்த தாக்கத்தின் தன்மையைப் பொறுத்து உள்ளுள்ள தேங்காய் உருவாகுமளவு வேறுபடும். எதிர்பார்த்தளவு தேங்காயின் விருத்தி இருக்காததுடன் தேங்காயை உரிப்பதுவும் கடினமாக இருக்கும். சிற்றுண்ணியின் இத்தகைய தாக்கத்தினால் தேங்காயுற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்து. இதுவொரு வலிந்து தேடிய பிரச்சினை.

எங்கிருந்தோ வந்து இங்குள்ள தென்னைகளில் பீடையாகி எங்களுக்கு கிடைக்கும் வருமானத்தை பாதித்த வந்தேறு பீடை இதுவாகும்.

இச்சிற்றுண்ணியைக் கட்டுப்படுத்த சவர்க்கார கரைசலுடன் கழிவு எண்ணையை விசுறுவதும் வேப்பம் விதைச் சாற்றுடன் சவர்க்கார கரைசலை சேர்த்து விசுறுவதும் இங்கும் வெவ்வேறு நாடுகளிலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இவற்றினால் முழுமையாக சிற்றுண்ணியை கட்டுப்படுத்த முடியாது. தென்னை அபிவிருத்தி சபை யினுதவியுடன் மொனோகுறோட்டபொஸ் எனும் பூச்சி மற்றும் சிற்றுண்ணி நாசினிய தென்னையிலுள்ள காய்களனைத்தையும் பறித்துவிட்டு இளம் வேரினூடாக செறிவூட்டப்பட்ட நிலையில் செலுத்தினால் இதனையும் சிவப்பு நீள் மூஞ்சி வண்டையும் கட்டுப்படுத்தலாம்.

ஆனால் மொனோகுறோட்டபொஸ் எனும் பீடை நாசினி பயன்பாடு எமது நாட்டில் பொதுவான பாவனைக்கு தடை செய்யப்பட்டு இப்படியான பீடைகளை கட்டுப்படுத்த தென்னை அபிவிருத்தி சபை மூலமே செய்யமுடியும் என்பதால் அச்சபையை அணுகி இதற்கு தேவையான பரிந்துரைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

சிற்றுண்ணி தாக்கம் குறைவான கடும் பச்சை நிற தென்னை இனங்களை நடுகை செய்தலுடன் வட்ட வடிவான காய்களை உருவாக்கும் இனங்களையும் இதற்காக தெரிவு செய்யலாம். தேவையற்ற பீடைநாசினி பிரயோகத்தை என்றுமே தவிர்ப்பது நல்லது. (வளரும்)

# இராமேஸ்வரம் மீனவர்களின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி

## அமைச்சர் நாராயணசாமி நம்பிக்கை

(கொழும்பு)

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டு வருவார் என மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னை விமான நிலையத்தில் நிருபர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் அடிக்கடி இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று முன்தினம் இலங்கை கடற்படையினரால் துரத்தியடிக்கப்பட்டிருப்பதாகவும் மீனவர்களது பொருட்களையும் சேதப்படுத்தியிருப்பதால் மீனவர்களுக்கு பல ஆயிரக்கணக்கான ரூபா நஷ்டப்பட்டு பொருள் சேதத்தினால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இராமேஸ்வரத்தில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பிரச்சினை தொடர்பில் சிவ்சங்கர் மேனன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுவார்.

இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்தும் தொடர் தாக்குதல் பற்றியும் பேசி நிச்சயம் ஒரு முற்றுப் புள்ளி வைப்பார்.

மேலும் இலங்கைத் தமிழர்களின் புனர்வாழ்வுக்குத் தேவையான திட்டங்கள் நிறைவேற்றுவது பற்றியும் இலங்கை ஜனாதிபதியிடம் சிவ்சங்கர் மேனன் கலந்துரையாட இருப்பதாக மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். (அ)

# மாணவர்களின் கல்விக்கு பாதிப்பு ஏற்படுத்தாதீர்!

## உபவேந்தர் குழு கோரிக்கை

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மேற்கொள்ள திட்டமிட்டிருக்கும் பணி பகிஷ்கரிப்பு தொடர்பில் உபவேந்தர்கள் குழு விசேட கோரிக்கை ஒன்றை விரிவுரையாளர்களிடம் முன்வைத்துள்ளது.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் விரிவுரையாளர்கள் எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என உபவேந்தர்கள் குழு கேட்டுக்கொண்டுள்ளது. எதிர்வரும் ஜூலை 4 ஆம் திகதி தொடக்கம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்திருந்த நிலையில் உபவேந்தர்கள் குழு இந்தக்கோரிக்கையை முன்வைத்துள்ளது.

முன்னதாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் 21 நாட்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட பணிப்பகிஷ்கரிப்பு கடந்த 26 ஆம் திகதியே நிறைவுக்கு வந்தது. (அ)

# கடந்த வருடத்தில் மட்டும் 44 ஆயிரம் முறைப்பாடுகள்

## தேசிய சிறுவர் பாதுகாப்புச்சபை அறிவிப்பு

(பூந்தோட்டம்)

**அவசர தொலைபேசி இலக்கமான 1929 ஆனது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தினுள் 44 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித் துள்ளது.**

வவுனியா மாவட்ட செயலகத்தில் பாதிப்படைந்த பிள்ளைகளின் வீடுகளை புனரமைப்பதற்காக பண உதவி வழங்கும் நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது. இதன் போது மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இம்முறைப்பாட்டின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் 2011 ஆம் ஆண்டு 16 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் அவற்றில் 14 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. 2ஆம் திகதி முறைப்பாடுகள் செயல்முறையில் உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டதுடன் மேலதிகமாக கிடைக்கப்பெற்ற 7 முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆறு மாதங்களில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வவுனியா அலுவலகத்திற்கு 1929 என்ற அவசர தொலைபேசி அழைப்பின் ஊடாக 9 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதல் ஜுன் மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதியில் அவசர தொலைபேசி மூலம் கிடைத்த 9 முறைப்பாடுகளில் 6 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டதாகவும் 3 முறைப்பாடுகள் செயல்முறையில் உள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டதுடன் மேலதிகமாக கிடைக்கப்பட்ட 4 முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பல்வேறு வகையிலும் பாதிப்புக்குள்ளான 50 பிள்ளைகளின் விடுதிகளில் சிறு திருத்த வேலைகளுக்காக 50 ஆயிரம் ரூபா வீதம் பண உதவி வழங்கப்பட்டது.

இதன் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திசாநாயக்க, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.கே.பந்துல ஹறிச்சந்திர எனப் பலர் கலந்து கொண்டனர். (அ-2-266)

## மோ.சை.விபத்தில் ஒருவர் காயம்

(கரவெட்டி)

வடமராட்சி இமையாணன் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக நேற்றுக் காலை 11.30 மணியளவில் இடம்பெற்ற இரு மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, தொண்டைமானாறு பகுதியில் இருந்து கிளிநொச்சிக்கு சென்ற மோட்டார் சைக்கிளும் யாழ். பருத்தித்துறை வீதியால் சென்ற மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதிய விபத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியை சேர்ந்த கோடீஸ்வரன் ஜெயராஜ் (வயது 19) என்ற இளைஞரே சிகிச்சை பெற்று வருபவராவார். (அ-9-24)

## வவுனியாவில் போலி நாணயம் அச்சிட்ட மூவர் கைது



(பூந்தோட்டம்)

வவுனியாவில் போலி நாணயத்தாள் மற்றும் கொள்ளைச்சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் மூவர் வவுனியா மாவட்ட விசேட குற்றவியல் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குருமன்காட்டு பகுதியில் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

வவுனியா பகுதியில் வைத்து திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் இருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர். அவர்களை விசாரணை செய்த போது வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து போலி நாணயத்தாள்கள் அச்சிடுவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதன் அடிப்படையில் அவ்வீட்டை பரிசோதனை செய்த பொலிஸார் அங்கிருந்த ஆயிரம் ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள் ஒன்றினை கைப்பற்றியதுடன் அவற்றை அச்சிடுவதற்கு பயன்படுத்திய கணனி பிரதியிடும் கருவி, கணனி உதிரிப்பாகங்கள் உட்பட 135 பவுண் தங்கப் பொருட்களும் கைப்பற்றியுள்ளனர். ஏனைய தங்க நகைகள் மன்னார், வவுனியா, கிளிநொச்சி வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ளதும் இதன்போது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து மேலும் ஒருவர் அவ்வீட்டில் இருந்து கைது செய்யப்பட்டுள்ளார். ஏனையவர்கள் தவசிகுளம், சிதம்பரபுரம் பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது. (அ-2-266)

## மாகாண தேர்தல் களத்தில் குதிக்கிறார் பிள்ளையான்

### ஐ.ம.சு.கூட்டமைப்பு அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மாகாண சபைகள் கலைக்கப்பட்டதையடுத்து முதலமைச்சர்களாக இருந்தவர்களையே தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர்களாக மீண்டும் நிறுத்தவுள்ளதாக ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு நேற்றையதினம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தீர்மானத்துக்கமைய கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், சப்ரகமுவ முதலமைச்சர் மஹிபால ஹேரத் மற்றும் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேட்டி பிரேமலால் திஸாநாயக்க ஆகியோர் தத்தம் மாகாணங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அணிகளுக்கு தலைமை தாங்குவர்.

ஐ.ம.சு.கூட்டமைப்பில் ஆகவும் பெரிய கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இந்த தேர்தலுக்காக புனரமைக்கப்பட்டுள்ளது என்று கூறிய சுசில் பிரேமஜயந்த முன்பு முதலமைச்சர்களாக இருந்தவர்களே மீண்டும் பிரதம வேட்பாளர்களாக நியமிக்கப்படுவர் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளுடன் அவற்றுக்காக ஒதுக்கப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை பற்றி பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளதாகவும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (அ-2)

## மீளாய்வுக் கூட்டம் மருதனார்மடத்தில்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள 12 கல்வி வலயங்களிலும் கடமையாற்றும் திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கான செயற்றிட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் மருதனார் மடத்தில் அமைந்துள்ள வடமாகாண கல்வித் திணைக்களத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக மேலதிக கல்விப்பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

கடந்த வருடங்களில் அரசசார்பற்ற நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பாகவே இம்மீளாய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வருகை தருகின்ற திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான காலப்பகுதிகளில் நடை பெற்ற கட்டுமானப் பணிகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகள், வழங்கப்பட்ட உதவிகள்,உபகரணங்கள், ஏனைய பொருட்கள் தொடர்பான அறிக்கைகள், பயிற்சி செயற்றிட்டங்கள், வேலைப்பட்டறைகள் போன்ற மென்செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகள் அரச நிறுவனங்கள் தனியாகவும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தனியாகவும் கோவைப்படுத்தி எடுத்து வருமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9-15)

## ஹேமகுமார நாணயக்கார புதிய கட்சி ஆரம்பிப்பார்

(கொழும்பு)

விவசாயத்துறை தொடர்பான ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் ஹேமகுமார நாணயக்கார புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியல் கட்சியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி,சுதந்திரக்கட்சி மற்றும் இடதுசாரி கட்சியை சேர்ந்தவர்கள் இதில் இணைந்து கொள்ள உள்ளனர்.

புதிய கட்சியொன்றை அமைப்பது தொடர்பில் பல தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றன. அரசாங்கத்திற்கு எதிராக ஜனநாயக ரீதியிலும் அமைதியான வழியிலும் போராட்டம் நடத்தப்படும்.


ஜனாதிபதி மீது குற்றம் சுமத்த முடியாது எனவும் தனிப்பட்ட ஒரு நபரினால் அனைத்தையும் செய்ய முடியாது. அமைச்சர்கள் மேற்கொண்டு வரும் பிழைகளுக்கு ஜனாதிபதி மீது குற்றம் சுமத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான ஹேமகுமார நாணயக்கார அண்மையில் ஆலோசகர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 173

## பெர்லினின் வீழ்ச்சியும் பாசிச ஜேர்மனி நிபந்தனையின்றி சரணடைதலும்



யுத்தமுடிவில் பெர்லின் வீதி

சோவியத் போர்வீரர்கள் ஆக்கிரமிப்பாளர்களைப் போலின்றி விடுதலை வீரர்களாக ஜேர்மனியப் பரப்பினுள் நுழைந்தனர். ஜேர்மனியப் பாசிசத்தின் கொடும்பாதகக் கொள்கை நாட்டை அழிவிற்கும் மக்களை நாசத்திற்கும் கணக்கிலடங்கா இன்னல்களுக்கும் ஏழ்மைக்கும் இட்டுச் சென்றிருந்தது. இந்த பயங்கரத்திலிருந்து மீளும் தருணம் வந்தது. செஞ்சேனையால் கைப்பற்றப்பட்ட ஜேர்மனியப் பரப்பின் சமாதான வாழ்வை சீரமைக்கவும் முதலாவதாக மக்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கவும் சோவியத் அரசாங்கமும் சோவியத் இராணுவத்தின் படைத் தலைமையும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டன.

சண்டைகள் நடந்து கொண்டிருந்த போதே சோவியத் போர்வீரர்கள் தமக்களிக்கப்பட்ட உணவை ஜேர்மனிய குடிமக்களுடன் பகிர்ந்து கொண்டனர். போர் நடவடிக்கை முடிந்ததும் பெர்லின் வாசிகளுடன் சேர்ந்து நகர வாழ்க்கையைப் புனரமைப்பதில் ஈடுபட்டனர். நகரத்திற்கு உணவுப் பொருட்களைக் கொண்டு வரவும் மருத்துவ நிலையங்களை அமைக்கவும் சோவியத் படைத் தலைமை உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டது. சோவியத் அரசாங்கம் 96,000 டன் தானியம், 60,000 டன் உருளைக்கிழங்கு, 50,000 வரையிலான கால்நடைகள், சர்க்கரை, கொழுப்பு மற்ற பொருட்களை பெர்லினுக்கு அனுப்பியது. தொற்றுநோய்களைத் தவிர்ப்பதற்காக உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. ஜூன் 21 வாக்கில் பெர்லினில் 96 மருத்துவ மனைகளும் 10 மகப்பேற்று விடுதிகளும் 146 மருந்தகங்களும் 6 அவசர சிகிச்சைப் பிரிவுகளும் திறக்கப்பட்டன. இவற்றில் 654 மருத்துவர்கள் பணியாற்றினர். சுமார் 800 மருத்துவர்களுக்குத் தனி மருத்துவம் பார்க்க அனுமதி அளிக்கப்பட்டது.



யுத்தத்தின் முடிவில் பெர்லின் நகர்

சோவியத் படைத் தலைமையும் மாஜிஸ்ட்ரேட் அலுவலகமும் பெர்லினில் முனிசிபல் நிர்வாகம் செயற்பட உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டன. சோவியத் போர்வீரர்களாலும் பாசிச எதிர்ப்பு வீரர்களாலும் காப்பாற்றப்பட்ட கிளீன்கென்பெர்க் எதிர்ப்பு வீரர்களாலும் காப்பாற்றப்பட்ட கிளீன்பெர்க் மின்நிர்வாகத்திலிருந்து ஏப்ரல் 29 ஆம் திகதி கார்ல்ஸ்ஹோர்ஸ்ட் வட்டம் முதன் முதலாக மின்சக்தியைப் பெற்றது. இவ்வட்டத்தில் மற்ற இடங்களை விட முன்னதாகத் தண்ணீர் சப்ளையும் கழிவுநீர் குழாய்களும் புனரமைக்கப்பட்டன.

பாசிச சித்தாந்தம் பெரிதும் பின்னுக்குத் தள்ளிய ஜேர்மனியக் கலாசார மறுமலர்ச்சிப் பிரச்சினைகளின் தீர்வின் மீது பெர்லின் விடுவிக்கப்பட்ட முதல் நாட்களிலிருந்தே சோவியத் படைத் தலைமையும் ஜேர்மனிய பாசிச எதிர்ப்பாளர்களும் கவனம் செலுத்தினர். மே நடுவில் பெர்லின் வானொலி தன் ஒலிப் பரப்புகளைத் தொடங்கியது, மாத இறுதியில் நாடக் மன்றம் திறந்தது, ஜூன் நடுவில் நகரத்தில் 120 திரைப்பட அரங்குகள் இயங்கின. அரசியல் வாழ்வை விழித்தெழச் செய்வதற்காக சோவியத் படைத் தலைமை மிக அனுகூலமான சூழ்நிலைகளை ஏற்படுத்தியது. நகர நிலவரத்துக்குப் பொறுப்பு வகித்த 5-வது முக்கிய தாக்குதல் படையின் படைத் தலைமையும் பெர் லின் வட்டார இராணுவக் காரியாலயங்களும், விடுதலை வந்த முதல் மணிப்பொழுதிலேயே ஜேர்மனிய மக்களின் பாசிச எதிர்ப்பு, தேசபக்த சக்திகளுடன் நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்தின. இச்சக்திகள் மே ஆரம்பத்திலிருந்தே ஜேர்மனியக் கம்யூனிட்டுக் கட்சி மத்திய கமிட்டியின் பிரதிநிதியாகிய வால்டர் உல்பிரிஹ்டின் தலைமையிலிருந்த முன்முயற்சிக் குழுவை தனது உறுதியான அரசியல் தலைமையாகக் கொண்டிருந்தது. சோவியத் அரசாங்கத்தின் கட்டளைகளைப் பின்பற்றிய இராணுவ ஆட்சியினர் ஜேர்மனிய சுயநிர்வாகத்தின் உரிமைகளையும் கடமைகளையும் படிப்படியாக விரிவுபடுத்தினர். இவை ஜேர்மனியப் பூமியில் புதிய அரசாட்சியை- தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் மக்களின் எல்லா உழைப்பாளிப் பிரிவினரின் ஆட்சியை- ஏற்படுத்துவதற்கான முதல் நடவடிக்கைகளாக அமைந்தன.


ஜூலை மாதம் ஜேர்மனிய கம்யூனிட்டுக் கட்சியின் தலைவர் வில்ஹெல்ம்பீக் தலைமைப் பணியாளர்கள் குழுவுடன் நாடுகடத்தலிலிருந்து பெர்லின் திரும்பினார். அவர் திரும்பியதையடுத்து கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கை தீவிரமடைந்தது, இது விரைவிலோயே நாட்டின் முக்கிய கட்சியாக மாறியது. "யுத்தம் முடிந்து ஐந்து வாரங்கள் கழிந்தபின், ஆக்கிரமித்த அரசின் மக்களுக்கு, கட்சியை அமைக்கவும் பத்திரிகைகளை வெளியிடவும் வாய்ப்பளித்த, கூட்டங்களுக்கும் பேச்சுகளுக்கும் சுதந்திரம் வழங்கிய ஓர் ஆக்கிரமிப்பு இராணுவத்தை வரலாற்றில் எங்கே கண்டுபிடிப்பது?" என்று அக்காலத்தில் ஜேர்மனியத் தொழிலாளர் இயக்கத்தில் பிரபல தலைவராயிருந்த ஓத்தோ கிரேட்டொவால் எழுதினார். ஜூலை 1 வாக்கில் நகரத்தில் பெரும்பாலும் மாமூல் வாழ்க்கை புனர்நாட்டப்பட்டு பொருளாதாரத்தின் வெற்றிகரமான வளர்ச்சிக்கான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. கிழக்கு ஜேர்மனியின் யுத்தத்திற்குப் பிந்தைய சமுதாய அமைப்பை ஜேர்மனிய மக்களே தமது பாசிச எதிர்ப்புக் கட்சிகள் மற்றும் பிரதேச அரசாங்கங்களின் மூலம் நிர்ணயித்தனர். மார்ஷல் ஜூக்கவ் தலைமையில் ஜேர்மனியிலிருந்த சோவியத் இராணுவ நிர்வாகம் இதற்கு சகல விதங்களிலும் உதவி, வகை செய்து அவற்றின் நடவடிக்கைக்கு உத்திரவாதம் அளிக்க மட்டுமே செய்தது.

(தொடரும்)

## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்



சோவியத்தினால் கைதான ஜேர்மன் அதிகாரிகள் விசாரிக்கப்படுகிறார்கள்



ஹிட்லரின் தோல்வியைத் தாங்கமுடியாத ஜேர்மன் அதிகாரி தற்கொலை செய்துகொண்டபொழுது


# எமது மண்ணில் இந்தியாவுக்கு எதிரான செயற்பாடுகளை நாம் அனுமதிப்பதில்லை

## நீங்களும் அவ்வாறே செய்யுங்கள்

## ஹெல உறுமய மன்மோகனுக்கு கடிதம்

(கொழும்பு)

**துன்ப்மான சம்பவங்களுக்கும் பயங்கரவாத யுத்தத்திற்கு வழி வகுத்த தனிநாடு அமைப்பதற்கான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் 1976 ஆம் ஆண்டு தீர்மானத்தை நினைவில் கொள்ளுங்கள். எமது மண்ணில் இந்திய எதிர்ப்பு செயற்பாடுகளை நாம் அனுமதிக்கவில்லை என்பதை கூறிக் கொள்கிறோம் என குறிப்பிட்டு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபிததேரர் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் ஒன்ற்ற அனுப்பியுள்ளார்.**



தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆற்றிய உரை தொடர்பிலும் கருணாநிதி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி நடத்தவுள்ள தமிழீழ ஆதரவு இயக்கம் என்னும் அமைப்பின் மாநாடு தொடர்பிலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தமிழர்களுக்கான தனி நாட்டை அடைவதற்காக நேரடி நடவடிக்கையில் தாம் ஈடுபடக் கூடும் என குறிப்பிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அண்மையில் ஆற்றிய உரையை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இந்த உரையானது கோபமேற்படுத்துவதும் ஆத்திரமூட்டுவதும் தேசத்துரோகமானதுமாகும். மூன்று தசாப்த கால யுத்தத்திலிருந்து மெதுவாகவும் உறுதியாகவும் நாங்கள் மீளெழும்போது அனைத்து வகையான இன குரோதத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தும் நோக்கத்தைக் கொண்டது என்பதையும் நீங்கள் சந்தேகமின்றி ஏற்றுக்கொள்வீர்கள்.

தமிழர்களுக்கு தனியான தாயகம் அமைக்கப்பட வேண்டுமென பிரகடனப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. துன்பமான சம்பவங்களுக்கும் பயங்கரவாத யுத்தத்திற்கு வழிவகுத்த தனிநாடு அமைப்பதற்கான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் 1976 ஆம் ஆண்டு தீர்மானத்தை நாம் நினைவில் கொள்வோம்.

எமது மண்ணில் இந்திய எதிர்ப்பு செயற்பாடுகளை நாம் எப்போதும் அனுமதிக்கவில்லை என்பதை நீங்கள் நினைவு கூறுவீர்கள் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம்.

நட்பு நாடு என்ற அடிப்படையில் அத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறுவதை நாம் எப்போதும் அனுமதிக்கமாட்டோம். இந்திய மண்ணில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை எந்த கட்சியும் மேற்கொண்டாலும் அதனை தடுக்குமாறு அக்கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கடிதம் கடந்த 27 ஆம் திகதி கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தஞ்சம் புகுந்த அசேஞ்சை சரணடைய கோரிக்கை



ஈக்வடோர் நாட்டின் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ள விக்கி லீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசேஞ்சை சரணடையும் படி பொலி ஸார் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். இரண்டு பெண்களை கற்பழித்தது தொடர்பாக சுவீடன் அரசு அவர் மீது வழக்கு தொடர்ந்தது.

இதை எதிர்த்து அசேஞ்ச் மனுச் செய்திருந்தார். அசேஞ்சை சுவீடனிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டுள்ளனர். இந்த உத் தரவை எதிர்த்து அசேஞ்ச் மேல்முறையீடு செய்தார். இதையடுத்து அசேஞ்சை கைது செய்து சுவீடனிடம் ஒப்படைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை தவிர்ப்பதற்காக அசேஞ்ச் லண்டனில் உள்ள ஈக்வடோர் நாட்டு தூதரகத்தில் கடந்த 20 ஆம் திகதி தஞ்சம் புகுந்தார்.

தூதரகத்தை விட்டு வெளியேறும் பட்சத்தில் அவர் கைது செய்யப்படுவார். நேற்று முன்தினம் வரை அவரை நாடு கடத்தக் கூடாது என நீதிமன்றம் தெரிவித்திருந்தது. நேற்று முன்தினம் காலக்கெடு முடிந்ததால் அவரை நாடு கடத்த வேண்டிய பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸார் ஈக்வடோர் தூதரக அதிகாரிகளுக்கும் அசேஞ்சுக்கும் சரணடையக் கோரும் நோட்டீசை விநியோகித்துள்ளனர். இதைய டுத்து அவர் எந்த நேரத்திலும் கைது செய்யப் படும் சூழல் உள்ளது. (அ-2)

# வடக்கு மீள்குடியேற்ற நடவடிக்கை பூச்சிய நிலையிலேயே உள்ளது

## த நியூயோர்க் டெய்லி நியூஸ் இணையம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்தத்துக்கு பின்னர் இலங்கை அபிவிருத்தி புள்ளிகளை அதிகரித்துக் கொண்டிருந்தாலும் வடக்கில் செய்யப்பட்டிருக்க வேண்டிய மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் பூச்சியமாக இருப்பதாக த நியூயோர்க் டெய்லி நியூஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் மக்கள் 30 வருடங்களை யுத்தத்துக்காகவே அப்பணித்து விட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அவர்களது இந்த வாழ்க்கையும் முடிவுக்கு வந்து விட்டதாக கருதப்பட்டது.

ய்த்தம் இடம்பெற்று வந்த பிரதேசங்கள் தற்போது அரசாங்கத்தின் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. எனினும் அங்குள்ள மக்கள் இன்னும் தமக்கான நியாயம் மற்றும் மீளமைப்பு வளங்கள் கிடைக்கும் என எதிர்பார்த்தபடியே இருப்பதாக அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்கில் 10 பொதுமக்களுக்கு ஒரு இராணுவ சிப்பாய் என்ற நிலை காணப்படுகிறது. இது வடக்கில் சமாதானத்தை உருவாக்கி இருப்பதாக அரசாங்கம் கூறும் கூற்றுக்கு எதிராக இருப்பதாகவும் அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

சோதனை சாவடிகள் மற்றும் இராணுவ முகாம்களின் ஊடாக இராணுவத்தினர் மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும்போது அங்கு தமிழ் மக்கள் சாதாரண வாழ்க்கையை வாழ முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# காடுகளுக்கு தீ வைப்போருக்கு கடும் தண்டனை கிடைக்கும்

## அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

காடுகளுக்கு தீ வைப்பவர்களுக்கு எதிராக கடும் தண்டனை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதென இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை 64 காடுகளில் தீ பற்றியிருப்பதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவை தொடர்பாக ஆராய்ந்து எதிர்வரும் ஒரு மாத காலப்பகுதிக்குள் நடவடிக்கை எடுப்பதற்கென சம்பந்தப்பட்ட ஆறு அமைச்சுக்கள் உள்ளடங்கியதாக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இது தொடர்பாக கடுமையாக நடவடிக்கை எடுக்குமாறு எமக்கு பணித்துள்ளார். இதன்படி காடுகளுக்கு தீ வைப்பவர்களுக்கு எதிராக கடும் தண்டனை வழங்கப்படவிருப்பதுடன் எதிர்காலத்தில் தண்டனையினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கூடுதல் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் தீ வைப்பவர்களை கைது செய்யுமாறும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# இராணுவத்தின் செயற்பாட்டால் தமிழ் மக்களுக்கு மன அழுத்தம்

## த சலீம் நியூஸ் இணையம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்படுவதாலும் சிங்கள குடியேற்றம் செய்யப்படுவதாலும் வடக்கில் தமிழ் மக்கள் பாரிய மன அழுத்தங்களை சந்திப்பதாக த சலீம் நியூஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செய்திகளை வெளியிட்டு வரும் இந்த இணையத்தளம் இவ்வாறான அடக்கு முறைகளுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் முறைப்பாட்டை முன் வைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் இந்த இணையத்தளத்தின் ஊடாக முறைப்பாடுகளை தெரிவித்து அதனை ஐக்கிய நாடுகள் சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியும் என இந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது. (அ-2)

# மக்களின் கொடையால் மக்களை வாழவைத்தவர் தங்கம்மா

## தாயாகி நின்றவருக்கு இன்று நான்காவது குருபூசைத்தினம்



அன்னை, சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி என எல்லோராலும் அறியப்பட்ட நடமாடிய தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து நான்காண்டுகளாகிவிட்டன. ஆனால் அன்னையின் அழகான கோலம் மனதில் அழியாத கோலமாக நிலைத்து நிற்கின்றது. தங்கம்மா என்ற பெற்றோர் இட்ட பெயர் அவரின் தாய்மைப் பணியை உணர்ந்து இடப்பட்ட பெயராகும். தங்கம் போலப் பளபளக்கும் அந்தத் தெய்வீகக் கோலம் துர்க்காபுரத்தில் உலாவிய அழகுக் கோலமானது. எல்லோருக்கும் அம்மாவாகி தாயாகி நின்ற தத்துவம் தங்கம்மா. இவர் தோற்றம் குறை தீர்க்கும் ஒரு கொடை வடிவம்.

சிறுவயதில் பின்பற்றி சைவ வாழ்வியல் இளமையில் ஏற்ற ஆசிரியப் பணியைச் செவ்வனே செய்யத் துணை நின்றது. மாணவச் செல்வங்களை மகிழ்விக்கும் தாயாகிப் பல்லாண்டு ஆசிரியப் பணியாற்றிய தங்கம்மா பலருக்கு அம்மாவாக வாழ்ந்தவர். ஆசிரியப் பணி செய்யும் காலத்திலேயே சமயப்பணியாக அவர் செய்த சமயச் சொற்பொழிவுகள் கேட்பவரையெல்லாம் அம்மா என்று அழைக்கச் செய்தன. ஆலயங்களில் அவர் ஆற்றிய உரைகள் அனைவரது உள்ளங்களையும் வழிபாட்டில் அமைதி காண பயிற்சியளித்தன. இதனால் வகுப்பறைக் கல்விப்பணிக்கும் அப்பால் வழிபாட்டுத் தலங்களில் அம்மா எல்லோராலும் வரவேற்கப்படும் அன்னையானார். அம்மாவின் செந்தமிழ்ப் பயிற்சியும் பேச்சாற்றலும் சிவத்தமிழ்ச்செல்வி என்ற பட்டத்தை நல்கின. பெரியபுராணத்தையும் கந்தபுராணத்ஷதயும் கம்பராமாயணத்தையும் கையிலெடுத்துப் படிக்க வாய்ப்பற்ற பொதுமக்களுக்கு அம்மாவின் உரைகள் கேள்வியறிவைக் கொடுத்தன. கணீரென்ற குரலும் இசைப்புலமையும் பக்தி இலக்கியங்களைப் படிக்கத்தூண்டின. பிறந்த நாட்டில் மட்டுமன்றி மலேசியா, சிங்கப்பூர், லண்டன் எனச் சிவத்தமிழ்ச்செல்வி உலகம் அறிந்த அன்னையானார். அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் நூலாக்கம் பெற்றமையால் இன்று எல்லோரும் அறியும் சொற்பொழிவுகளாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

சிவத்தமிழ்ச்செல்வியின் தமிழ்ப்பணியில் முக்கியமாகக் குறித்திட வேண்டிய சிறப்பான பணியாக விளங்குவது அவர் துர்க்கை அம்மன் ஆலயச் சூழலில் நடத்திய கருத்தரங்குகளும் நூல் வெளியீடுகளும் ஆகும். ஆலயம் என்பது ஒரு கற்கை நெறிக்களம் என்பதை அவர் பணி நன்குணர்த்தியது. தமிழக அறிஞர்களும் ஈழத்தறிஞர்களும் இணைந்து சமயக் கருத்துக்களையும் தமிழிலக்கியச் சுவையையும் பொது மக்கள் அறிய வைத்தமை அன்னையின் தமிழ்ப்பணிக்குச் சான்றாகும். அவர் காட்டிய இக்கற்பித்தல் பணி ஏனைய ஆலயங்களிலும் தொடரப்பட வேண்டும் என்பதே அவருடைய தொலைநோக்காக இருந்தது.

அவர் காட்டிய நெறியைச் சில ஆலயங்கள் நடைமுறைப்படுத்தின. சமயம் என்பது ஒரு வாழ்வியல் என்பதைச் சைவர்கள் நன்குணர வேண்டும் என்பதே அன்னையின் எண்ணமாக இருந்தது.

துர்க்கா துரந்தரியாக ஏறக்குறைய 40 ஆண்டுகள் ஆற்றிய கோயிற்பணி ஈழத்துச் சமய வரலாற்றிலே சிறப்பிடம் பெற்றுள்ளது. பெண்மையின் பேணும்மரபை அம்மா முன்னெடுத்துச் செய்த பணியால் துர்க்காபுரம் உலகறிந்த இடமாயிற்று. அன்னை துரந்தரி ஆனார். கோயில் மக்களின் பண்பாட்டுப் பயிற்சிக்களம் என்ற மூத்தோர்களது எண்ணத்தை அன்னை முழுமையாகச் செயற்படுத்தினார். ஏதிலிகளுக்கு ஒரு இனிய வாழ்வுச் சூழல் கோயில் என்பதை அன்னையின் பணிகள் உறுதி செய்தன. மக்கள் கொடையால் மக்களை வாழவைக்கும் புதிய ஆற்றுப் படையாக அவர் பணி அமைந்தது. பெண்மையின் இயற்கைக் கொடையான தாய்மையை எல்லோரும் அறியக் குழந்தைப் பராமரிப்பில் அன்னை செவிலித்தாயாக நின்றார். தமிழ் இலக்கியங்களில் பேசப்பட்ட மகளிர் வளர்ப்பு நிலையை நன்குணர்த்தினார். நற்றாயை பிரிந்து கலங்கி நின்ற பெண் குழந்தைகளை அம்மா செவிலித் தாயாக நின்று வளர்த்தார். துரந்தரி என்ற பெயரின் பொருளை எல்லோரும் அறியச் செய்து கொடையாளர்களைக் குழந்தைப் பராமரிப்பில் தொடர்புறச் செய்தார். துர்க்காபுரம் மகளிர் இல்லம் இன்று உலகம் முழுவதும் பரவி வாழும் சைவத் தமிழர் கொடையால் வளம் பெற்று விளங்குகிறது.

பெண்களின் வாழ்வியலில் சைவப்பணியும் தொண்டுப் பணியும் இணையப் பயிற்றும் கல்லூரியாக இன்று துர்க்காபுரம் திகழ்கிறது. பெண்குழந்தைகள் கோவிற் சூழலிலே வாழும் பேறுபெற்றவர். முற்பிறவியில் அவர்கள் செய்த புண்ணியத்தின் பலனே இன்று கோயிற் சூழலில் வாழும் பேற்றைத் தந்துள்ளது என்பதை அவர்கள் நன்குணர அன்னை நின்று வழிகாட்டினார். எல்லாக் குறைகளையும் தீர்க்கும் அன்னையாம் துர்க்கையின் அடியை நாளும்பொழுதும் தொழுதால் எல்லாம் எமக்குக் கிடைக்கும் என்பதை எல்லாக் குழந்தைகளும் உணர அன்னையின் அரவணைப்பு அருகில் நின்றது. அன்னை இந்த உலக வாழ்வை நீத்தபோது அன்னை துர்க்கையிடமே அக்குழந்தைகளை அடைக்கலப் பொருளாக்கி சென்றார். போரின் கொடுமையால் ஆறாத மனவடுக்களோடு துர்க்காபுரம் வந்த குழந்தைகள் மனம் பக்தியால் பலம் பெற வழி காட்டினார். இடப்பெயர்வு ஏற்பட்டு ஆலயம் சேதமான போது தாய்ப் பறவை குஞ்சுகளை அரவணைத்துக் காப்பது போல அன்னை அழைத்து சென்றார். இல்லறம் துறந்த அவர் மடியில் தலை சாய்க்கும் குழந்தைகள் கவலைகள் தீர்ந்தன. தாய், தந்தையற்ற குழந்தைகளின் பொறுப்பை தலையிலே தாங்கி அவர்களை இல்லற வாழ்வில் இணைத்து இன்பங்கண்டு பேரக் குழந்தைகளையும் கொஞ்சி மகிழ்ந்தவர்.

காலக்கடப்பில் அன்னையின் பணிகள் ஆய்வுத்தரவுகளாகி உயர்பட்டம் பெறும் அறிவாளிகளையும் உருவாக்கியுள்ளன. பெண்ணின் பேராற்றல் வீட்டுப்பணி யோடு முடங்கி விடாமல் நாட்டுப்பணியோடும் இணைய வேண்டும் என்பதை நன்கு சிந்தித்து செயற்பட்ட அன்னை பெண்களுக் கெல்லாம் ஒரு வழி காட்டி. காலம் எமக்கு தந்த ஒரு கைவிளக்கு.

இன்று சிலையாகி நின்று எம்மை செயற்பட வைக்கும் செவிலித்தாய் பக்திக்கனலை மூட்டிய தெய்வப்பாவை. ஈழத்து ஏதிலிகள் துயர் துடைக்கப் பிறந்த தனிப்பெருந் திருமகள் அவரோடு பல ஆண்டுகள் பழகிப் பெற்ற அறிவு ஒரு தனியறிவு. பார்வையால் நிர்வாகம் செய்யும் அவரது பணிகள் பல இன்று பலராலும் தொடரப்படுகிறது. பண்பாட்டை பரப்பும் பணியில் அம்மாவின் செயற்பாட்டை எல்லோரும் பின்பற்ற வேண்டும்.

அவருடைய சிவத்தமிழ்க் கோலமே பெண்மையின் பேரழகு என்பதை இன்றைய இளம் பெண்கள் மனதில் கொள்ள வேண்டும். ஆலயத்திற்கு செல்லும் போது எமது தமிழினத்தின் இருப்பை உணர்த்தும் ஆடையில் வர வேண்டும்என்பதே சிவத்தமிழ்ச்செல்வியின் கொள்கையாகும். பண்பாட்டை பேணி எதிர்காலத் தலைமுறையிடம் கையளிக்க வேண்டும். ஆண்மையை திறம்பாது வழிநடத்தும் தாய்மைப் பணியை நிறைவாக செய்த துர்க்காதுரந்தரி வழி நடப்பதே நாம் அவருக்கு செய்யும் நன்றிக் கடனாகும். இன்று அவர் பணிகளை பார்த்து உல கமே வியந்து நிற்கின்றது. வரலாற்று நாயகியாக எல்லோரும் பாராட்டும் சிவத்தமிழ்ச் செல்வி வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந் தோம் என்பது உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ்ப் பெண்களுக்கெல்லாம் பெருமைதருவது.

பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பதிவு செய்த பெண்ணினத்தின் வழி நின்று எல்லோரையும் வழிநடத்திய தங்கம்மா இன்று வானுறையும் தெய்வமாகி விட்டார். எனினும் அவர் எம் அருகில் இல்லையே என நினைக்கும் போது மனம் கசிகிறது. விழியோரத்தில் கண்ணீர் துளிர்க்கிறது. அவர் பணியை நாமும் செய்து அவர் நினைவில் வாழ்ந்து முடிய வேண்டும் என்ற எண்ணமே மேலோங்குகிறது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

# கோத்தாவுக்கு எதிரான வழக்கு தள்ளுபடியானது

(கொழும்பு)

சட்டவிரோத கட்டட நிர்மாணம் தொடர்பில் பாதுகாப்பு செயலாளருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கை உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்துள்ளது.

வயல் ஒன்றில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை இடித்து மீண்டும் வயலை பழைய நிலைமைக்கு கொண்டு வருமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் ஆர்.பீரிஸிற்கு எதிராக குற்றம் சுமத்தியிருந்தது.

இந்த குற்றச்சாட்டுகளுக்கு எதிராக இவர் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விற்கும் எதிராக வழக்கு தொடர்ந்திருந்தார்.

ஆயினும் இவருக்கு எதிராக கடுவல நீதிமன்றம் ஏற்கனவே தடையுத்தரவை பிறப்பித்துள்ளதாக பாதுகாப்பு செயலாளரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறான ஓர் பின்னணியில் பாதுகாப்பு செயலாளருக்கு எதிராக வழக்கு தொடரும் சட்ட அடிப்படை கிடையாது என தெரிவித்து நீதிமன்றம் இந்த வழக்கை தள்ளுபடி செய்துள்ளது. (அ-2)

# அமைச்சர்களின் மனைவியர்கள் தேர்தலில் போட்டியிட ஆர்வம்

(கொழும்பு)

அமைச்சர்களின் மனைவியர், பிள்ளைகள் போன்றோர் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட ஆர்வம் காட்டி வருகின்றார்.

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட ஆளும் கட்சி அமைச்சர்களின் உறவினர்கள் கூடுதல் விருப்பம் வெளியிட்டுள்ளனர்.

எனினும் அமைச்சர்களின் உறவினர்கள் தேர்தலில் போட்டியிடுவதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் விரும்பவில்லை என தெரிவிக்கப்படுகிறது. கட்சிக்காக நீண்ட காலம் உழைத்தவர்களுக்கு வேட்பாளர் வாய்ப்புக்கள் உரிய முறையில் வழங்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

மாறாக உறவினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதனால் வேட்பாளர்கள் பாதிக்கப்படலாம் என சிரேஷ்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(அ-2)



# நகருமா இலங்கை அரசு ஜனநாயகத்தை நோக்கி!

## தானே தன் தலைக்கு மண்ணை வாரி இறைக்கும் இனவாதம்

சுனந்த தேசப்பிரிய

ஐக்கிய நாடுகள் சபைக்குள் வரும் சர்வதேச நாடுகளின் சமூகம்போல் அல்லாது, சர்வதேச தமிழ்ச் சமூகத்திற்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையில் பிரிக்கமுடியாத தொடர்புகள் இருக்கின்றன. அவர்கள் பல்வேறு வழிமுறைகளில் குறிப்பாக இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய தமிழ் சமூகத்துடன் தினமும் நேரடியான தொடர்புகளைக் கொண்டுள்ளனர். இதனால் ஐக்கிய நாடுகள் அமைப்பில் ஏற்படும் இலங்கை தொடர்பான விடயங்கள் மாத்திரமல்லாது, இங்கிலாந்தில் அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து பெறும் வெற்றிகள்கூட உடனடியாக தேசிய தமிழ் சமூகத்திற்கு சென்றடைகின்றன.

இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர் தமிழர்கள் உட்பட இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக அக்கறை காட்டிவரும் சர்வதேச தளத்தில் இருந்து செயற்படும் நான்கு பிரதான சக்திகள் இருக்கின்றன.

முதலாவதாக, இங்கு ஆரம்பத்தில் கூறிய, மேற்குலக ஜனநாயக நாடுகளின் தலைமையில் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்குள் வெளிப்பாடுகளைக் கொண்டுவரும் சர்வ்தேச அரச சமூகம் இருக்கின்றது. ஏற்கனவே இவர்கள், இலங்கையின் பொறுப்புக்கூறும் விடயம் தொடர்பில் யோசனை ஒன்றை நிறைவேற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஊடாக தமது அழுத்தங்களை வெளிக்காட்டியுள்ளனர்.

இர்ண்டாவது, தமிழ்நாட்டை அடிப்படையாகக் கொண்ட இந்தியாவின் தேசிய தளத்தில் வளர்ச்சியடைந்துவரும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விரைவான மற்றும் நீடித்த அரசியல் தீர்வை எதிர்பார்க்கும், அதிகரித்துச் செல்லும் அரசியல் கருத்தியலாகும். தமிழகத்தில் மாத்திரமல்ல, தேசிய ரீதியில் அனைத்துக் கட்சிகளும் இந்த நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன.

மூன்றாவது, சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைக் கண்காணிப்பகம், சர்வதேச நெருக்கடிகள் தொடர்பான குழு ஆகிய தலைமை வகிக்கும் அமைப்புகளினால், உருவாக்கப்பட்டுள்ள விரிவான அழுத்தங்களை கொடுக்கக்கூடிய சர்வதேச மனித உரிமை அமைப்புகளைக் கொண்ட சமூகமாகும். ஆய்வு ரீதியான அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் சர்வதேச நாடுகளுக்கு இந்த அமைப்புகள் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றன.

அடுத்தது, புலம்பெயர் தமிழர்கள் எனக் கூறப்படும் இலட்சக்கணக்கான தமிழர்களைக்கொண்டதும் பாரிய பிரசார பலத்துடன் கூடிய சர்வதேச சமூகத்தில் உள்ள இலங்கை தமிழ் சமூகமாகும். பேரணிகள், உண்ணாவிரதங்கள், கூட்டங்கள் மற்றும் பிரசாரங்கள் என்பவை இவர்கள் வழிமுறையாகும்.

இந்த சகல விடயங்களையும் கொண்ட வரைவின் ஊடாகவே நாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இங்கிலாந்தில் எதிர்நோக்கிய அபாக்கியத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

போர் முடிவடைந்து கடந்த மூன்று வருடங்களில் இலங்கை இனப் பிரச்சினைக்கு நியாயமான மற்றும் நிலையான தீர்வைக் காண இலங்கை அரசாங்கம் எவ்விதமான முனைப்புகளையும் மேற்கொள்ளவில்லை.



போர்க்காரணங்களுடன் பிணைக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் தமிழ்த் தேசியத்தின் கூர்மையை உடைப்பதே இலங்கை அரச நிர்வாகத்தின் அடிப்படை தந்திரோபாயமாகும்.

இலங்கைத் தமிழர்களை அடிமைப் படுத்தப்பட்ட இனமாக வைத்திருப்பதைத்தவிர, அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என்ற நோக்கம் இலங்கை அரச நிர்வாகத்திடம் இல்லை. அப்படியான அபிலாஷை இருந்திருக்குமானால், அவர்கள்ால் நியமிக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் யோசனையை குப்பைக் கூடையில் எறிந்துவிட்டு, காலத்தைக் கடத்தும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்கமாட்டார்கள்.

நாட்டின் பெரும்பான்மை இனமான சிங்களவர் மத்தியில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என்ற தீர்க்கமானதும், கடுமையான தலையீடுகளும் இல்லை என்ற விடயமானது, இந்த அரசியல் வரைபில் சேர்த்துக்கொள்ள வேண்டிய விடயமாகும். இந்த விடயமானது இலங்கை அரச நிர்வாகத்தின் நிலைப்பாடானது, சிங்கள சமூகத்தின் பெரும்பான்மையானவர்களின் விருப்பமாக, அங்கீகரிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சர்வதேச தளத்தினூடாக தீர்வைக் காணவேண்டும் என்ற, தேசிய தமிழ்ச் சமூகத்தின் பிரதான அரசியல் பிரதிநிதியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை, இந்த நிலைமையின் அடிப்படையில்தான் நோக்க வேண்டும். இதன் மூலம் கூறப்படுவது என்னவென்றால், இலங்கை அரசாங்கம் நியாயமான தீர்வை வழங்காது என்பதை ஏற்றுக் கொள்வதாகும். தற்போது இலங்கை வாழ் தமிழர்கள் மாத்திரமல்ல, சர்வதேச தமிழ் சமூகமும் அந்த முடிவுக்கு வந்துவிட்டது என்பதையே எம்மால் காண முடிகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தினால், பிரதிநிதித்துவப் படுத்தப்படும். பெரும்பான்மை இன சிங்கள அரசியல், இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்கத் தயார் இல்லை. எனினும், மேலே கூறப்பட்ட நான்கு சர்வதேச சக்திகள் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இலங்கையிலுள்ள தமிழர்களுடன் ஒன்றிணைந்துள்ளன.

இதனால், இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது என்பது இலங்கைத் தமிழர்கள் மற்றும் சர்வதேச சக்திகளின் கூட்டு அபிலாஷையாக மாறியுள்ளது. இந்த யதார்த்தம் வழங்கும் எதிர்காலப் பார்வையானது, அச்சம் நிறைந்தது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சார்பான அரசியல் விமர்சகரான தயான் ஜயதிலக்க இதனை இவ்வாறு காண்கிறார்:

வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெறும். அவ்வாறான நிலைமையின் கீழ் அந்த மாகாணசபை தமது சுயநிர்ணய உரிமையை அமுல்படுத்துவதற்காக சர்வதேச சமூகத்திடம் உதவிகோர வாய்ப்பிருப்பதால் வடமாகாண சபைக்கு தேர்தலை நடத்தக்கூடாது. இடைக்கால நிர்வாக சபை மாத்திரம் நியமிக்கப்பட வேண்டும் என தயான் ஜயதிலக்க யோசனை முன்வைத்துள்ளார்.

இந்த யோசனையானது, நாம் மேற்குறிப்பிட்ட தேசிய மற்றும் சர்வதேச வளர்ச்சிகள், இலங்கை அரச நிர்வாகம் எதிர்நோக்கிவரும் நெருக்கடிகளை எமக்கு வெளிக்காட்டி நிற்கிறது.

இலங்கைக்கு மிகவும் சாதகமற்ற, இந்திய உள்ளிட்ட சர்வதேச வளர்ச்சிகளின் முன்னால், வடமாகாண சபையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியின் கீழ்வருவதற்கு இடமளிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகத்திற்கு முடியாது. எனினும் இதற்கு தீர்மானகரமான பெரும்பான்மை, தமிழர்களின் விருப்பத்திற்கு இடமளிக்காது, தமது அடிவருடிகளுக்கு அந்த மாகாணத்தின் நிர்வாகத்தை ஒப்படைக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் நிலைமைகளை மேலும் மோசமாக்குமேயன்றி, அதனை குறைக்காது. இவ்வாறான செயற்பாடானது, இலங்கையை தேசிய ரீதியில் அல்லாத, மோதலில் தள்ளும். யுத்த வாதத்தில் இருந்து விலகி, ஜனநாயக நிர்வாகத்தை நோக்கி செல்வதும், இதன் மூலம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நியாயமானதும், நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வை வழங்குவதே, இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான ஒரேயொரு வழியாகும்.




இந்த அரசியல் பின்னணியிலேயே லண்டன் அவமானத்தின் எதிரொலி மேலும் மேலும் ஒலிக்காமல் தவிர்க்க வேண்டுமானால், இலங்கை அரச நிர்வாகம், தமது நிலைப்பாடுகளில் முன்னுதாரணமான மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

# சந்திரிகாவின் நடவடிக்கையே சமாதான முயற்சியை குழப்பியது

## தெரிவித்தார் ராஜித: மறுத்தார் சந்திரிகா

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நடவடிக்கைகளினாலேயே சமாதான முயற்சிகள் காலதாமதமாகியதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகித்த ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுத்தியிருக்காவிட்டால் சமாதானத்தை எட்டியிருக்க முடியும்.

பிரபல முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் மகளின் திருமண வைபவத்தில் கலந்து கொண்ட போது இருவருக்கும் இடையில் நடைபெற்ற இந்த சம்பாசனையிலேயே ராஜித இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தேர்தல் அதிகாரத்தின் மூலம் ஆட்சி பீடமேறிய அரசாங்கத்தை நீங்கள் காலில் இழுத்தீர்கள். ரணிலின் சமாதான முயற்சிகளுக்கு தடையேற்படுத்தி இருக்காவிட்டால் முன்னரே நாட்டில் சமாதானம் ஏற்பட்டிருக்கும்.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமது கட்சி ஆதரவாளர்களை பழி வாங்கியதாக சந்திரிகா குற்றம் சுமத்தினார்.

அத்துடன் சுமார் ஆயிரத்து 400 கட்சி ஆதரவாளர்கள் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டனர். மேலும் பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆயினும் ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சி கலைப்பதற்கு எடுத்த தீர்மானம் சரியானதே என்றார். இந்த திருமண விருந்துபசாரத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# கூடங்குளம் அணுமின் உலையால் இலங்கைக்கு பாதிப்பில்லை

## கலாநிதி ரஞ்சித் விஜேவர்த்தன கூறுகிறார்

(கொழும்பு)

தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டு வரும் கூடங்குளம் அணு உலை நிலையம் இலங்கைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தாது என அணுசக்தி அதிகார சபையின் தலைவர் கலாநிதி ரஞ்சித் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பிலுள்ள மின்வலு எரிசக்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கூடங்குளம் அணு உலை நிலையத்தின் பாதிப்பு சுமார் 30 கிலோ் மீற்றர் தூரத்திலேயே பாதிப்புகளை ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் இலங்கை அதிலிருந்து 230 கிலோ மீற்றர் தூரத்தில் இருப்பதாகவும் ஆபத்துக்களுக்கு இடமில்லை.

உண்மையில் தமிழ் நாட்டில் கூடங்குளத்தில் அமையும் அணுமின் உலை நிலையம் எமக்கும் பெரும் அனுபவமாக அமையும்.

அது தொடர்பில் நாம் அவதானத்தை செலுத்தி வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, மஹிந்த அமரவீர ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

# சிறுவர் துஷ்பிரயோகமும் நடமாடும் சேவையும்

(யாழ்ப்பாணம்)

யா/இடைக்காடு மகா வித்தியாலயமும் அச்சுவேலி பொலிஸ் பிரிவும் இணைந்து நடத்தும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வும் மாபெரும் நடமாடும் சேவையும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை யா/அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ஏ.அருந்தவநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அதிகாரி கேல் பெரேரா, சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், கோப்பாய் வலி. கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன், வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.கிருபாகரன், யாழ். பொலிஸ் பரிசோதகர் ஜே.ஏ. பி.காமினி பெரேரா, யாழ். வலய மாணவர் கல்வி அபிவிருத்தி பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆர்.குணநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விரந்தினர்களாக வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் ஏ.உதயகுமார், யாழ்.பொலிஸ் உதவிப் பரிசோதகர் பண்டார டி.போவத்த, யாழ்.தேசியகல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களான வி.நந்தகுமார், திருமதி வி.கானசெல்வி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நடமாடும் சேவையில் யாழ். மாவட்ட அரச நிறுவனங்கள் பலவும் யாழ்.போதனா வைத்திய சாலை விசேட வைத்திய நிபுணர்களும் பங்கு கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-9)

# 2012-06 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1737-ரஷ்யாவின் படைகள் மார்ஷல் மியூனிச் தலைமையில் துருக்கிப் படைகளைத் தாக்கி 4 ஆயிரம் துருக்கியர்களைச் சிறைப்பிடித்தனர்.

★ 1882-அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்பீல்ட்டை சுட்டுக்கொன்ற சார்ள்ஸ் கைட்டோ தூக்கிலிடப்பட்டான்.

★ 1905-விசேட தொடர்பியல் தத்துவத்தை அறிமுகப்படுத்தும் ஐன்ஸ்டீனின் இயங்கும் பொருட்களின் மின்னியக்கவியல் ஆய்வுக் கட்டுரை வெளிவந்தது.

★ 1910- இலங்கையில் 5 சத செப்பு நாணயம் பாவனையில் இருந்து விலக்கப்பட்டது.

★ 1912- கனடாவில் ரெஜினோ என்ற இடத்தில் சூறாவளி தாக்கியதில் 28 பேர் உயிரிழந்தனர்.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியினர் உக்ரைனின் லுவோவ் நகரைக் கைப்பற்றினர்.

★ 1956-அமெரிக்காவின் 2 விமானங்கள் அரிசோனாவில் மோதிக் கொண்டதில் 128 பேர் உயிரிழந்தனர்.

★ 1960-கொங்கோ பெல்ஜியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1971-சோவியத்தின் சோயுஸ் 11 விண்கலத்தில் ஏற்பட்ட காற்றுக் கசிவினால் விண்வெளி வீரர்கள் மூவர் உயிரிழந்தனர்.

★ 1972-ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேச நேரத்தில் ஒரு லீப் விநாடி அதிகரிக்கப்பட்டது.

★ 1985-பெய்ரூட்டில் 17 நாட்களாகக் கடத்தப்பட்டிருந்த 39 அமெரிக்க விமானப் பயணிகள் விடுவிக்கப்பட்டனர்.

★ 1990-கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனிகள் தமது பொருளாதாரத்தை ஒருங்கிணைத்தன.

★ 1997-முதலாவது ஹரிபொட்டர் நூல் வெளியிடப்பட்டது.

★ 1997-கொங்கொங் நாட்டின் அதிகாரம் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து சீனாவுக்குக் கைமாறியது.

★ 2002-பிரேசில் தனது ஐந்தாவது உதைபந்தாட்ட உலகக் கிண்ணத்தை வென்றது.

### பிறப்புக்கள்


★ 1966-மைக் டைசன், குத்துச் சண்டை வீரர்

★ 1969-சனத் ஜெயசூரிய, துடுப்பாட்ட வீரர்

### இறப்பு

★ 1917-தாதாபாய் நவுரோஜி, இந்திய அரசியல்வாதி (பி.1825)

## ஹொங்கொங் சுதந்திரதினம் (1960)




இது பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடுகளில் ஒன்றாக இருந்தது. 1997 ஆம் ஆண்டு சீன மக்கள் குடியரசின் சிறப்பு நிர்வாக பகுதிகளாக இரண்டு விளங்கின. இதில் ஹொங்கொங், மக்காவ் ஆகியன விளங்குகின்றன. இருப்பினும் ஒரு நாடு இரு கொள்கைகள் எனும் அடிப்படையில் பிரித்தானிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக ஹொங்கொங் தமக்கென தனித்துவமான தன்னாட்சி அதிகாரங்களுடன் கூடிய பொருளாதார நிர்வாகச் சட்டங்களைக் கொண்டுள்ளது.

உலகின் அதிக பயன்பாட்டில் உள்ள நாணயங்களில் ஹொங்கொங் டொலர் 9 ஆவது அதிக பயன்பாட்டில் உள்ளது. மக்கள் தொகையைப் பொறுத்த மட்டில் உலகில் மக்கள் நெரிசல் கூடிய இடங்களில் ஒன்றாக விளங்கியது. உலகின் அதி வளர்ச்சியடைந்த பொருளாதார மையங்களில் ஒன்றாகவும் வியங்குகின்றது.

இதன் மொத்த நிலப்பரப்பளவு 1104 சதுரக் கிலோ மீற்றர். இதன் நீளம் 15 கிலோ மீற்றர், அகலம் 9 கிலோ மீற்றர் ஆகும். இது யாழ்ப்பாணத்தின் பரப்பளவிற்கு சமனானது. யாழ். குடாநாட்டின் பரப்பளவு 1025 சதுர கிலோ மீற்றர்.

ஹொங்கொங்கின் மக்கள் தொகை 2007 ஆம் ஆண்டின் கணிப்பின்படி 6.94 மில்லியன்களாகும். அண்ணளவாக 70 இலட்சமாகும்.

பெரும்பான்மையானோரால் பேசப்படும் மொழி கண்டனீஸ் (சீனம்) தவிர ஆங்கிலமும் ஓரளவு பேசப்படுகின்றது. தவிர பல்லினத்தவரும் உள்ளனர். கிட்டத்தட்ட இரண்டாயிரம் தமிழர்களும் குடியுரிமைப் பெற்றவர்களாக உள்ளனர். சீன- பிரித்தானிய கூட்டறிக்கையின் படியும் ஒரு நாடு இரண்டு முறைகள் எனும் கொள்கையின் அடிப்படை யிலும் ஹொங்கொங்கிற்கு சிறப்பு நிர்வாகப் பிர தேசம் என்னும் அதிகூடிய தன்னாட்சி அதிகாரம் மக்கள் சீனக் குடியரசினால் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஹொங்கொங் (ஐக்கிய இராச்சிய ஆட்சி முறைப்படி அமைந்த) தனித்துவமான அரசியல், ஆட்சி அதிகாரங்கள், சட்டதிட்டங்கள், பொலிஸ், நாணயம், சுங்கக் கொள்கை, குடிவரவு குடியகல்வு சட்டங்கள், வெளிநாட்டு பிரதிநிதித்துவம் போன்றவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.

இருப்பினும் இதன் வெளிவிவகார கொள்கைகள், எல்லை பாதுகாப்பு போன்றன மத்திய சீன அரசிடமே உள்ளது. குடிநீர், மின்சாரம் போன்றனவும் சீனாவினூடாகவே கிடைக்கின்றது.

கூட்டறிக்கைப்படி ஹொங்கொங் குறைந்தது 50 ஆண்டுகளுக்காவது முதலாளித்துவப் பொருளாதார முறையையும் மக்களுடைய உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றையும் உறுதிப்படுத்துவதற்கு ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இயற்கையிலேயே மலைத்தொடர்களும் மலைக்குன்றுகளுமாகும். சமதரைப் பிரதேங்கள் இங்கு இருக்கவில்லை. ஆனால், மலைகளை செதுக்கி கடல் பரப்பை நிரப்பியும் சில மலைகளையே தரைமட்டமாக்கியுமே ஹொங்கொங் தற்போதைய தோற்றத்தைப் பெற்றுள்ளது.





# போர் முரசத்தைக் கண்டு பயந்த நரி

## பஞ்ச தந்திரக் கதைகள்

அந்த நரிக்குக் கொடிய பசியென்றால் அவ்வளவு பசி. எங்கெங்கோ அலைந்து திரிந்தும் உணவுப் பொருள் எதுவும் கிடைக்கவில்லை. கடைசியாக களைத்துப்போய் ஒரு மரத்தின் நிழலில் வந்து படுத்தது. பசியின் காரணத்தால் அதற்குத் தூக்கமும் வரவில்லை.

சில தினங்களுக்கு முன்னால் அந்தக் காட்டின் வழியாக வந்த வீரர்கள் அந்த மரத்தின் அடியில் தங்கியிருந்தனர். அவர்கள் போகும் போது தங்கள் போர் முரசத்தை மறந்து போய் விட்டுச் சென்று விட்டனர். மரத்தில் இருந்து காய்ந்த சுள்ளிகள் அந்த முரசத்தில் விழும் போது ஏற்படும் பேரோசை அந்த நரியை அச்சுறுத்தியதால் அது பயந்து போய் ஒரு புதரில் சென்று பதுங்கிக் கொண்டது. முரசத்திலிருந்து எழுந்த ஓசையை அது கொடிய மிருகத்தின் சப்தம் என்றே எண்ணி விட்டது.

பின்னர் அங்கிருந்த வண்ணம் அந்த முரசத்தைக் கவனித்தது. அதனுடைய கண்களுக்கு அது ஒரு வித்தியாசமான மிருகம் போன்றே தோன்றியது. பின்னர் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மெல்ல மெல்ல நடந்து முரசத்தின் பக்கத்திற்கு வந்து சேரவும், அந்தச் சமயம் பார்த்து ஒரு காய்ந்த பெரிய சுள்ளி, முரசத்தின் மீது வந்து விழவும் அது பெருத்த ஒலியை எழுப்பியது. உடனே பயந்து ஓடிச் சிறிது தொலைவு சென்று நின்று பார்த்தது. பழைய படியும் ஒலி வருமா என்று பார்த்தது. எந்த ஒலியும் வரவில்லை. ஆகவே, மெல்ல அந்த முரசத்தின் பக்கத்தில் வந்தது.



தைரியத்தையெல்லாம் வரவழைத்துக் கொண்டு அதன் பக்கத்தில் சென்று உற்றுப் பார்க்கவும் அந்த முரசு சிறிது கூட அசையாததால் அது மிருகம் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டது.

அதன்பின்னர், தன்னுடைய கால்களால் அதைத் தட்டிப் பார்த்தது. அதிலிருந்து ஒலி வரவே அது மிருகமே அல்ல என்பதைத் திட்டவட்டமாக அறிந்து கொண்டது. மீண்டும் தன்னுடைய கால்களால் தட்டிப்பார்த்து ஒலி எழச் செய்து அதைக் கேட்டு மகிழத் தொடங்கியது.

அதன் மேல் தோலைப் பார்த்த நரி அதைக் கிழித்துப் பார்த்தால் என்ன என்ற எண்ணம் எழுந்தது. உள்ளே உண்பதற்கு நிறைய அளவில் தசைப்பகுதி இருக்கும் என்று எண்ணி அதைக் கிழித்து பார்க்கவும் அது வெற்றிடமாக இருக்கக் கண்டு, இதைக் கண்டா இவ்விதம் பயந்து நடுங்கினேன்! என்று எண்ணிய வண்ணம் அதைத் தன் கால்களால் உருட்டி விட்டுச் சென்று விட்டது.

இவ்விதம் கூறி முடித்த தமனகன், சிங்கத்திடம், அரசே! அதனால் தான் சொல்கிறேன் வெறும் சப்தத்தை மட்டும் வைத்துக் கொண்டு எதையும் எடைபோட்டு விடக் கூடாது. உண்மை என்னவென்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். நீங்கள் அனுமதித்தால் நான் சென்று பார்த்து வருகிறேன்! என்று கூறியது தமனகன் என்ற தந்திரக்கார நரி.

தமனகன், நீ சொல்வதைப் பற்றி ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால், விபரீதம் வந்துவிடக்கூடாதென்று பார்க்கிறேன். என் போன்றவர்களே செல்ல அஞ்சும் இடத்திற்கு நீ துணிந்து செல்வதாகக் கூறுகிறாயே, அதைத் தான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்! என்று கூறியது பிங்களகன் என்ற அந்தச் சிங்கம்.

நீந்த வேண்டும் என்றால் தண்ணீரில் இறங்கித் தான் தீர வேண்டும். அது என்ன மிருகம், எவ்வளவு ஆற்றலுள்ளது என்பதை அறிவதற்கு யாராவது ஒருவர் துணிந்து செல்லத் தான் வேண்டும். நம் உயிர் போய் விடுமே என்று எண்ணி அஞ்சிக் கொண்டிருப்பதில் பொருளே இல்லை. சரி அரசே! நான் சென்று விரைவில் திரும்பி வருகிறேன். என்னை ஆசீர்வதியுங்கள்! என்றது அந்தப் பொல்லாத நரி.

சரி நீ துணிந்து செல்ல முடிவு செய்து விட்டாய். உனக்கு வெற்றி உண்டாகட்டும். போய் வா! தமனகனே! என்றது சிங்கம்.

அந்தப் பயங்கரமான சப்தம் வந்த இடத்தைக் குறிவைத்துச் சென்றது தமனகன்.

தமனகன், சஞ்சீவகன் இருந்த இடத்தை அடைந்து விட்டது. இந்த எருது தானா இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்ணி விட்டது. இது எழுப்பிய பெரிய சப்தத்தைக் கேட்டுத் தானா நம் சிங்கராஜா பயந்து விட்டார்? என்று எண்ணிய தமனகன் அந்த எருதிடம் எதுவும் பேசாமல் திரும்ப வந்து விட்டது. சிங்கம் பயப்படுவது போன்று அது ஒரு கொடிய மிருகமல்ல என்பதைத் தெரிந்து கொண்ட நரி, இனி இதைச் சமாளித்துக் கொள்ளலாம் என்ற எண்ணமுடன் திரும்பி வந்து கொண்டிருந்தது. வரும் வழியில் அந்தத் தந்திரக்கார நரி இந்த எருதை தன் நண்பனாக்கிக் வைத்துக் கொண்டு சிங்கத்துடன் நன்கு நெருங்கிப் பழகி அதன் அன்பைப் பரிபூரணமாகப் பெற வேண்டும் என்று எண்ணியது.

இவ்விதமாக அந்தக் குள்ளநரி எண்ணிக் கொண்டு செல்லவும், அங்கு சிங்கமோ வேறு விதமாக எண்ணிக் கொண்டிருந்தது.

நம் உள்ளத்திலுள்ளதை எல்லாம் இந்த நரியிடம் கூறிவிட்டோமே, ஒருவேளை இந்த நரி அந்த மிருகத்துடன் கூட்டாகச் சேர்ந்து நம்மை துன்புறுத்த எண்ணினால் என்ன செய்வது என்று எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்தது.

அப்போது அங்கு தமனகன் வந்து சேரவும் சிங்கத்திற்கு ஒரே ஆச்சரியம். இவ்வளவு விரைவில் திரும்பி வந்து விட்டதே என்று தமனகனிடம், இவ்வளவு விரைவில் திரும்பி விட்டாயே, உன்னால் அந்தப் பொல்லாத மிருகத்தை பார்க்க முடியவில்லையோ? என்று கேட்டது.

பார்த்தேன் அரசே, அந்த விலங்கு உங்களுடன் நட்பு கொள்ள விரும்புகிறது. நீங்கள் அதற்கு இசைவு தெரிவித்தால் நான் உடனே சென்று அழைத்து வந்து விடுவேன்! என்றது நரி.

சிங்கம் எதுவும் பேசவில்லை. இந்த நரி இவ்விதம் திடுதிப்பென்று வந்து அந்த மிருகத்தை அழைத்து வருவதாக கூறுகிறதே, அதனுடைய குண இயல்புகள் எப்படியிருக்கும் என்றே தெரியவில்லையே என்று எண்ணிக் கொண்டிருக்க நரி அதை வேறு விதமாக எடுத்துக் கொண்டது. அது ஒன்றும் பேசாதிருக்கிறதே, அது சம்மதத்துக்கு அறிகுறி என்று எண்ணிக் கொண்டு சஞ்சீவகனிடம் சென்றது.

இது ஒரு சாதாரண எருது தான். நாம் சிங்கத்தின் பெயரைச் சொல்லி கொஞ்சம் மிரட்டிப் பார்க்கலாம் என்ற எண்ணமுடன் பேசியது.

எருதே! நீ என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாய் உன் மனதில்? ஏன் இவ்விதம் இந்தக் காடே அதிரும் படி கத்திக் கொண்டிருக்கிறாய்? எங்களுடைய அரசன் பிங்களகன் உன்மீது ஆத்திரமுடன் இருக்கிறார். அவர் தான் இங்கு என்னை அனுப்பி வைத்தார்! என்று தமனகன் கூறவும், பிங்களகன் என்ற பெயரைக் கூறியதால் அது என்னவென்று அறிய விரும்பிய சஞ்சீவகன் யார் அந்தப் பிங்களகன்? என்று கேட்டது.

அந்தப் பொல்லாத குள்ள நரி அந்த எருதின் முகத்தைப் பார்த்துக் கொண்டு இதை நம் வழிக்கு இலகுவாகக் கொண்டு வந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டு, பிங்களகனையா யார் என்று கேட்கிறாய்? அவர்தான் சிங்கராஜா. இந்தக் காட்டின் அரசர் அவர் தான். நீ இவ்விதம் காட்டுக் கத்தல் கத்தி அவருடைய அமைதியையே அழித்துவிட்டாய். இங்கிருந்து கொஞ்சம் தொலைவில் தான் அவர் இருக்கிறார்! என்று கூறவும் எருது பயந்து விட்டது.

நண்பனே, அவ்விதம் நான் அவருடைய அமைதியைக் குழைக்க வேண்டும் என்ற எண்ணமுடன் கத்தவில்லை. எப்படியோ தவறு நடந்து விட்டது. நண்பனே! நீதான் சிங்கராஜாவை எப்படியாவது சமாதானப் படுத்த வேண்டும்! என்று கூறியது.

இவ்விதம் சஞ்சீவகன் கூறவும் இந்த எருதைநம்முடையவழிக்குஇலகுவில்கொண்டு வந்து விடலாம் என்று எண்ணியது குள்ள நரி. கொஞ்சம் பிகுவுடன் பேச ஆரம்பித்தது.

நீ ரொம்பவும் நல்லவனாக இருக்கிறாய். உனக்கு எந்தவித ஆபத்தும் வந்து விடக் கூடாதென்று பார்க்கிறேன். இனிமையாகப் பேசும் நீ குணத்திலும் நல்லவனாகத் தான் இருப்பாய் என்று எண்ணுகிறேன். நான் அரசரிடம் உன்னைப் பற்றிப் பேசி அவரைச் சமாதானப்படுத்துகிறேன். அதுவரை இங் கேயே இரு என்று கூறிவிட்டுச் சிங்கத்தைப் பார்க்கச் சென்றது.

சிங்கத்தைப் பார்க்கச் சென்ற தமனகன் என்ற நரி, சஞ்சீவகனைப் பற்றி வேண்டுமென்றே மிகைப்படுத்திக் கூறியது.

சிங்கராஜாவே! அதுஒரு சாதாரண விலங்கு அல்ல. சிவபெருமானின் வாகனமாக்கும். அதைச் சிவபெருமானே அனுப்பி வைத்தாராம். அதனால்தான் அது இவ்விதம் கத்துகிறது! என்றது. சிவபெருமான் என்று சொன்னதும் சிங்கத்திற்குக் கொஞ்சம் அச்சம் ஏற்பட்டது. அதனால் தான் அது இந்தக் கத்துக் கத்துகிறது போலும் என்று எண்ணியது.

சரி அந்தச் சிவபெருமானின் வாகனத்திடம் நீ என்ன சொல்லிவிட்டு வந்தாய்? அது நம்மை மதித்துப் பேசுமா? என்றெல்லாம் கொஞ்சம் அச்சமுடனேயே கேட்டது.

அரசே! அது யாருடைய வாகனமாக இருந்தால் தான் என்ன? உங்களைப் பற்றி மிகவும் பெருமையுடன் தான் கூறி வந்தேன். உங்கள் ஆற்றல் மட்டுமன்றி அஞ்சா நெஞ்சம் பற்றியும் கூறி வந்தேன். நீர் யாருடைய வாகனமாக இருந்தாலும் எங்கள் அரசர் கவலைப்படப் போவதில்லை. சர்வ வல்லமையுள்ள எங்கள் அரசரை நண்பராகக் கொள்வது அறிவுடைமையாகும்! என்று கூறினேன். அதற்கு அது ஒத்துக் கொண்டது. வருவ தாக இசைவு தெரிவித்துள்ளது! என்றது நரி.

இவ்விதம் நரி சிங்கத்திடம் கூறவும், அதனுடைய முகத்தில் மகிழ்ச்சி பிறந்தது. சரி! நீ அதை அழைத்து வரவேண்டியது தானே! என்று கூறியது.

கட்டாயம் அழைத்து வருகிறேன்! என்று கூறிப் புறப்பட்டது தமனகன். சரி இனிமேல் நிம்மதியாகிவிட்டது. அரசருக்கு என்மேல் பரிபூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது! என்று எண்ணிய வண்ணம் சஞ்சீவகனை அழைத்து வரப் புறப்பட்டது.

சஞ்சீவகனிடம் சென்ற நரி, சிங்கத்தின் விருப்பத்தைக் கூறவும் சஞ்சீவகன் நரியுடன் புறப்பட்டு வந்தது.

தமனகன் இவ்விதம் அழைத்து வரவும் சிங்கம் எருதை அன்புடன் வரவேற்று மகிழ்ந்தது. இருவரும் நண்பர்களாகி விட்டனர்.

சஞ்சீவகனுடைய நட்பு கிடைத்ததும் பிங்களகன், வேட்டையாடுவதையே விட்டு விட்டது.

சிங்கமும் எருதும் அவ்வளவு நட்புடன் பழகவும் வேறு எந்த மிருகத்தையும் தன் பக்கம் அனுமதிக்கவில்லை சிங்கம். மேலும் கரடகன், தமனகன் கூட சிங்கத்தைச் சந்திக்க முடியாத நிலைமை ஏற் பட்டது.


நம் தலையில் நாமே மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட கதையாகி விட்டதே! என்று எண்ணித் தமனகன் பெரிதும் வருந்தியது.

ஆராயாமல் செய்து விட்ட போலிச் சாமியார் ஏமாந்த கதையாகி விட்டதே என்றது தமனகன்.

அது என்ன கதை. அதைக் கொஞ்சம் சொல்லேன் என்று கரடகன் கேட்கவும் தமனகன் சொல்லத் தொடங்கியது.

# சிவபுரத்தில் வசிக்கும் காணியற்ற மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு

## பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் உறுதி



(கொழும்பு)

**கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக பரந்தன் சிவபுரத்தில் வாழ்ந்து வரும் மக்கள் காணி உரிமைகள் இன்றியே வாழ்கின்றனர். இருப்பினும் அம்மக்கள் எதிர்கொள்ளும் காணிப்பிரச் சினைகளுக்கான தீர்வை அப்பகுதிக்குள்ளேயே காணப்பட வேண்டும. அத்தோடு இப்பகுதியில் இவ்வருட இறுதிக்குள் பாடசாலைக்கான வகுப்பறை கட்டடங்களும் அமைத்துக் கொடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

அப்பகுதிக்கு நேற்று முன்தினம் சென்று மக்களுடன் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் முப்பத்தைந்து வீதத்திற்கும் அதிகமானவர்கள் அனுமதிப்பத் திரங்கள் அற்ற காணிகளிலேயே குடியிருக் கின்றனர்.

ஏனெனில் நீண்ட காலமாக இவர்களுக்கு அரசாங்கத்தால் காணிகளை வழங்கக்கூடிய சூழல் இருக்கவில்லை. இப்பகுதியிலும் முறையாக காணி உரிமங்கள் இல்லாத நிலையில் 260 இற்கும் அதிகமான குடும் பங்களை சார்ந்த மக்கள் வாழ்கின்றனர். எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலை, யிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் தற்போது இப்பகுதியில் பாரிய நிதியீட்டங்களை மேற்கொள்ள முடியாதுள் ளோம். ஏனெனில் இப்பகுதியில் வாழும் மக் களுக்கு முறையான காணி அனுமதிப்பத் திரங்கள் இல்லை.

அவற்றை வழங்க அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பினரின் நீதிமன்ற வழக்குத் தாக்கலுக்கமைவாக இடைக்கால தடையுத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது ஏழை மக்களின் துரதிர்ஷ்டம் என்றே கருத முடியும்.

இருப்பினும் இம் மக்கள் எதிர்கொள்ளும் காணிப்பிரச்சினைக்குத் தீர்வு காண மாற்றுத் திட்டங்களை கொண்டு வர முயற்சித்து வரு கின்றோம்.

இப்பகுதியில் பாடசாலையொன்று தேவை யென்பதை நாம் உணர்ந்தோம். அதன டிப்படையிலேயே ஆனையிறவு அ.த.க. பாடசாலையினை இங்கு அமைக்கத் திட்ட மிட்டோம்.

அதற்காக ஐந்து ஏக்கர் காணியையும் ஒதுக்கீடு செய்துள்ளோம். அதற்கும் காணி உரிமம் எனும் விடயம் முட்டுக்கட்டையாக உள்ளது என்றார். (அ-2)

# யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள்ள அங்காடி வியாபார நிலையங்கள்

## வரி செலுத்தும் வர்த்தகர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் தற்போது அங்காடி வியா பார நிலையங்கள் அதிகளவில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதனால் நிரந்தர கட்டடங்களில் உள்ளூராட்சி சபைக ளுக்கு முறைப்படி வரி செலுத்தி தொழிலில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்கள் பெரும் நெருக் கடிகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக் கப்படுகின்றது.

தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த வியாபாரிகளே இவ்வாறு அங்காடி வியா பாரத்தில் ஈடுபட்டு வருவதாக வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டில் கடந்த காலங்களில் இவ்வாறு அதிகமாக அங்காடி வியாபார நிலையங்கள் இருந்ததில்லை. யுத்தம் முடி விற்கு கொண்டு வரப்பட்ட பின் அங்காடி வியாபாரிகளின் வருகை அதிகரித்துள்ளதாக வும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

அங்காடி வியாபாரிகளின் அதிகரித்த வரு கையால் வர்த்தக நிலையங்களை நாடுவோ ரின் வீதம் மிகவும் குறைந்து வருகின்றது.

வர்த்தக நிலையங்களில் விற்பனை செய் யப்படும் பொருட்களின் விலையை விட மிகக் குறைந்த விலையில் பொருட்களை பெற்றுக் கொள்வதனாலேயே நுகர்வோர் அங்காடி வியாபார நிலையங்களை அதிகளவில் நாடிச் செல்கின்றனர்.

பழவகைகள் முதல் உடைகள், தள பாடங்கள், இலத்திரனியல் சாதனங்கள் இன் னும் பல பெறுமதி மிக்க பொருட்களையும் விற்பனை செய்து வருகின்றனர்.

இது தவிர பூங்கன்றுகள், அரிய வகைத் தாவரங்கள், பயன்தரும் மரக்கன்றுகள் என் பனவற்றையும் வீதியோரங்களில் வைத்து விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த அங்காடி வியாபார நிலையங்களி னால் கிராமப் புறங்களில் ஓரளவுக்கு பயன் ஏற்பட்டாலும் நகரப்புறங்களில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

பல கோடி ரூபாவை வர்த்தக நிலையங் களில் முதலீடாக இட்டு வர்த்தக நடவடிக்கை களில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்களுக்கு வரக் கூடிய இலாபத்தினை மட்டுப்படுத்தி வருவ தோடு பொருட்களின் விற்பனையையும் குறைத்து வருகின்றது.

உள்ளூராட்சி சபைகளுக்கு மாதாமாதம் வரிகட்டி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் அங்காடி வியாபார நிலையங் களினால் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது. (அ-6)

# முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு உதவிப்பணம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் வேண்டுகோ ளுக்கு அமைவாக யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் புனர்வாழ்வு பெற்று விடுதலை செய்யப் பட்ட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பி னர்கள் 12 பேருக்கு உதவிப் பணம் வழங் கப்பட்டுள்ளது.

இந்த உதவிப்பணம் வழங்கும் நிகழ்வு நேற்று நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

ஒவ்வொருவருக்கும் சுமார் 20 ஆயிரம் ரூபா பணமும் உணவல்லாத பொருட்க ளும் வழங்கப்பட்டுள்ளன. (அ-6)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த பஷார் 1 பொதுச் சுகாதார பரி சோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்க ளுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற் றப்படவுள்ளதாக யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை யாழ்.வீதி ஞானக் குழந்தை பாலர் பாடசாலையிலும் முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை பலாலி வீதி 2 ஆம் ஒழுங்கையிலும் வைத்து வைத்து வழங்கப்படும். (அ-9)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலிநகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், இணுவில்,மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி,கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன் மணல் பிரதேசம்,தட்டாதெரு பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, குருநகர், பாசையூர் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப் பிட்டுள்ளார். (அ-9)


## விலைக்கேள்விக்கான கோருதல்
## வலி.கிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## அச்சுவேலி நகரில் பேருந்து நிலையம் நிர்ணயித்தல்

மேற்படி விடயம் சம்பந்தமாக 2012.06.11 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி மனு தொடர்பாக கேள்வி முடிவுறும் திகதியானது 03.07.2012 பி.ப 14.00 மணியிலிருந்து 05.07.2012 பி.ப 14.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

05.07.2012 பி.ப 14.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

அ.உ[illegible]யகுமார்
தவிசாளர்,
வலி.கிழக்கு பிரதேச சபை,
புத்தூர். (சி-362)

# கஸ்தூரியார் வீதி பலமாடிக் கட்டடத்தொகுதி தொடர்பான பிரேரணை நிறைவேறியது

(யாழ்ப்பாணம்)

கஸ்தூரியார் வீதியில் அமைக்கப்பட்டு வரும் பல மாடிக் கட்டடத் தொகுதி தொடர்பில் விளக்கமான பிரேரணையை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா முன்வைத்தார்.

நேற்றுமுன்தினம் யாழ். மாநகர சபையின் ஆறாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதன்போதே அவர் இதில் பிரேரணையை முன்வைத்தார். அதில்,

மாநகர சபையின் கடந்த 2010 ஆம் ஆண்டு 11 ஆம் மாத மாதாந்த பொதுக்கூட்டத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்ட எனது பிரேரணையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உபகுழுவின் கண்காணிப்பின் கீழ் கஸ்தூரியார் வீதியில் அமைக்கப்படுவதற்காக உத்தேசிக்கப்பட்ட பலமாடிக் கட்டடத் தொகுதிக்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டதுடன் இக்கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான முதலீட்டாளரை தெரிவு செய்து அம்முதலீட்டாளருடன் முதலீட்டு ஒப்பந்தமும் செய்யப்பட்டதுடன் இக்கட்டட வேலைகள் தற்பொழுது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஆரம்பத்தில் இச்சபையின் திட்டக்குழு கடந்த 2010 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் இக்கட்டட நிர்மாணத்தை அங்கீகரித்த சந்தர்ப்பத்தில் இக்கட்டடம் தரைத்தளத்துடன் மேலும் 3 மாடிகளைக் கொண்டதாகவும் தரைத்தளம் வாகனத்தரிப்பிடமாகவும் முதலாம், இரண்டாம் மாடிகள் 30 கடைகளுக்குரிய இட ஒதுக்கீட்டினை கொண்டதாகவும் அமைப்பதற்கு உத்தேசியக்கப்பட்டு அதற்கான வரைபடம் திட்டக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் இத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக முதலீடு செய்ய முன்வந்த முதலீட்டு நிறுவனத்திற்கு தமது முழு முதலீட்டையும் மீளப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக முதலாம், இரண்டாம் மாடிகளில் அமையவிருந்த கடைகளுக்கான இடங்களை விற்பனை செய்வதற்கான உரிமையை வழங்குவதற்கு இச்சபை 29.11.2010 ஆம் திகதிய மாதாந்த கூட்டத்தில் தீர்மானித்திருந்தது.

யாழ். நகரில் கடைகளுக்கான தேவை அதிகமாக இருப்பதனையும் முதலீட்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மண் பரிசோதனையின் அறிக்கைகள் மேலும் ஒருசில மாடித்தளங்களை அதிகரிகக்கூடிய சாத்தியங்களை வெளிப்படுத்தியதனையும் கவனத்தில் எடுத்துக்கொண்ட இச்சபையின் திட்டமிடல் குழுவானது 23.03.2011 ஆம் திகதியிலும் 11.07.2011 ஆம் திகதியிலும் நடத்திய கூட்டங்களில் இக்கட்டடத்தொகுதியின் ஆரம்ப வடிவமைப்பை மீள்பரிசீலனை செய்து இறுதியாக 11.07.2011 ஆம் திகதிய கூட்டத்தில் இக்கட்டடத்தொகுதியை தரைத்தளத்துடன் மேலும் 4 மாடிகளைக் கொண்ட கட்டடமாக அமைப்பதற்கும்,

இக்கட்டடத்தில் தரைத்தளத்திலும் முதலாம், இரண்டாம் மாடிகளிலும் கடைகளுக்கான இடங்களை ஒதுக்குவதற்கும் இக்கட்டடத்தின் சுற்றுச்சூழலை வாகனத்தரப்பிடமாக பாவிக்கத்தக்க வகையிலும் தயாரிக்கப்பட்ட புதிய கட்டட வரைபடத்தினை அங்கீகரித்ததுடன் அதனடிப்படையில் முதலீட்டாளர்களிடமிருந்து இதற்கான கணியப்பட்டியலை (B.O.Q) பெறப்பட்டதுடன் தற்போது இக்கட்டடம் துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருவதுடன் இக்கட்டடத்தின் தரைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள கடைகளின் வேலைகள் மிகப் பெரியளவில் நிறைவு பெற்று வருவதையும் நான் இச்சபையின் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

ஆரம்பத்தில் திட்டமிட்டபடி முதலாம், இரண்டாம் மாடிகளில் அமையவிருந்த 30 கடைகளுக்கான இடங்களை முதலீட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் முதலீடு செய்துள்ள நிறுவனத்தினால் விற்பனை செய்யும் ஏகபோக உரிமை வழங்கப்பட்டிருந்த போதும் பின்னர் 11.07.2011 ஆம் திகதிய திட்டமிடல் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேலதிகமாக ஒரு மாடித்தளத்தை நிர்மாணிப்பதுடன் தரைத்தளத்தையும் கடைகளுக்கான இடமாக அமையும் வகையில் இக்கட்டடத்தை அமைக்குமாறு முதலீட்டாளரை கேட்டுக்கொண்டதன் பிரகாரம் இக்கட்டடத் தொகுதியில் தற்போது அமையவிருக்கும் 56 கடைகளில் மாநகர சபையின் வேண்டுகோளின் பேரில் முதலீட்டாளர் மாநகர சபைக்காக ஒதுக்கிக் கொடுக்கவுள்ள தரைத்தளத்திலுள்ள 6 கடைகளைத் தவிர ஏனைய 50 கடைகளுக்கான இட ஒதுக்கீடுகளை விற்பனை செய்வதன் மூலம் முதலீட்டாளர் இக்கட்டடத்தொகுதியை நிர்மாணிப்பதற்காக முதலீடு செய்யும் தனது முழு முதலீட்டையும் மீளப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையினை முதலீட்டு ஒப்பந்தத்தின் கீழ் அந் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதையும் நான் இச்சபையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

மேலும் ஒரு சதமேனும் மாநகர சபையின் பணம் செலவு செய்யப்படாத நிலையில் இத் திட்டத்திற்கான முழு முதலீடும் தனியார் முதலீட்டு நிறுவனத்திடமிருந்தே பெறப்படுகின்றது என்பதை மேற்கூறிய மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பில் நீதியரசர்கள் இருவர் குறிப்பிட்டுக் கூறியுள்ளதனையும் இச்சபையின் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

கிட்டத்தட்ட ரூபாய் 400 மில்லியன் பெறுமானமான புத்தம் புதிய கட்டடத் தொகுதி இச்சபைக்காக எமது கௌரவ உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில் தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வருவதையிட்டு இச்சபை பெருமைப்பட வேண்டும் என்பதுடன் இக்கட்டடத்தொகுதியில் அமையவிருக்கும் கடைகளுக்கான வாடகைப்பணமாக எதிர்காலத்தில் பல இலட்சம் ரூபாய்கள் இச்சபையின் வருமானத்தை அதிகரிக்க இருப்பதையும் இத்திட்டத்தின் அனுகூலங்களாக நாம் எல்லோரும் நோக்க வேண்டும்.

எனவே, மேலே சுட்டிக்காட்டியபடி 2011.07.11 ஆம் திகதிய திட்டக்குழுவின் தீர்மானத்தின்படி தற்பொழுது அமைக்கப்பட்டு வரும் 56 கடைகளில் மாநகர சபைக்காக ஒதுக்கப்படும் 6 கடைகளைத் தவிர ஏனைய 50 கடைகளுக்கான இடங்களை விற்பனை செய்வதன் மூலம் முதலீட்டு நிறுவனம் தமது முழு முதலீட்டையும் மீளப்பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் யாழ். மாநகர சபை ஏ[illegible] கனவே செய்து கொண்டுள்ள ஒப்பந்த நிப[illegible]தனைகளுக்கு அமைவாக செயற்படுவது தொடர்பாக இக்கட்டட நடவடிக்கைகளுக்கான உபகுழுவும் சபையின் நிதிக்குழுவும் மேற்கொண்டுள்ள தீர்மானங்களை இச்சபையின் கவனத்திற்கு சமர்ப்பித்து இத்தீர்மானங்களை இச்சபை அங்கீகரிக்க வேண்டுமென நான் முன்மொழிகின்றேன் என அந்தப் பிரேரணையில் அவர் மேலும் தெரிவித்திருந்தார். (அ-6)

# யாழ். முதல்வரின் பிரேரணைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

முதல்வரினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை மீதான விவாதத்தின் போது எதிர்த்தரப்பு உறுப்பினர் க. விந்தன் சட்டத்திற்கு முரணாக கட்டப்பட்டு வரும் இந்தக் கட்டடத் தொகுதி தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை தான் நிராகரிப்பதாகவும் இந்தக் கட்டடத்தொகுதி அமைப்பதில் பல கோடி ரூபா ஊழல் இடம்பெற்றுள்ளதாகவும் ஆதாரத்துடன் அதை நிரூபிக்கத் தாம் தயாராகவுள்ளதாகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் கூறினார்.

விந்தனின் விவாதத்திற்கு ஆதரவாக தனது வாதத்தினை முன்வைத்த உறுப்பினர் ப. பரஞ்சோதி சட்டத்தின் படி ஒப்பந்தம் செய்து கொள்ளப்படவில்லை எனவும்,

சட்டத்திற்கு முரணாக இந்தக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றது எனவும் குற்றம் சாட்டினார்.

இதனைத் தொடர்ந்து ஆளும் கட்சியின் உறுப்பினர்களான பிரதி முதல்வர் எம்.ரமீஸ், எஸ்.விஜயகாந்த், செ. இளங்கோ ஆகியோர் முதல்வரின் பிரேரணைக்கு ஆதரவாக வாதிட்டனர்.

இதன்போது ஆளும்- எதிர்த்தரப்பு உறுப்பினர்களுக்கு இடையில் கடுமையான வாதம் இடம்பெற்றது. உறுப்பினர்கள் தாம் சார்ந்த கட்சியின் பெருமையை எடுத்துக் கூறியதோடு எதிர்க்கட்சியினர் ஆளும்கட்சியினரையும் ஆளும் கட்சியினர் எதிர்க் கட்சியையும் போட்டிக்கு ஏளனமாக பேசித் தீர்த்தனர்.

உறுப்பினர்கள் இவ்வாறு கடுமையான வாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது முதல்வர் மௌனமாக தனது ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

இறுதியில் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது பிரேரணைக்கு ஆதரவாக அதிக வாக்குகள் கிடைக்கப்பெற்றதன் பிரகாரம் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (அ-6)

## பௌதீகவியல் பாட நேரசூசி மாற்றம்

எதிர்வரும் 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் பௌதீகவியல் பாட பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் எனவும் ஏனைய பாட பரீட்சைகள் வழமை போல் இடம்பெறும் எனவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதில் பௌதீகவியல் பகுதி-2 காலை 8.30 மணிமுதல் 11.30 மணி வரையும் பௌதீகவியல் பகுதி-1 பிற்பகல் 12.30 மணி முதல் 2.30 மணி வரையும் நடைபெறும். (அ)

## மாவட்ட ஆங்கிலதினப்போட்டிகள்

மாவட்ட ஆங்கில தினப்போட்டிகளுள் எழுத்து மூல நிகழ்வுகள் யாவும் எதிர்வரும் ஜூலை மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் பேச்சுப்போட்டிகள் யாவும் ஜூலை 14 ஆம் திகதி சனிக்கிழமை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார். (அ)

# கருத்தரங்கும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

பெரிய புராணத்தில் அப்பூதியடிகள் நாயனார் பற்றிய கருத்தரங்கும் கலந்துரையாடலும் எதிர்வரும் ஜூலைமாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசனும் தொடக்கவுரையை கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாசும் வழங்கவுள்ளனர்.

அப்பூதியடிகள் நாயனார் புராணக் கட்டமைப்பு என்ற பொருளில் யாழ் பல்கலைக் கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் செல்வஅம்பிகை நந்தகுமாரனும் அப்பூதியடிகள் நாயனார் புராணம் காட்டும் விருந்தோம்பல் என்ற தலைப்பில் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நாக. தமிழிந்திரனும் கருத்துரைகளை வழங்குவர்.

கருத்தரங்கினைத் தொடர்ந்து கருத்தாடல் இடம்பெறும். இதன் இணைப்பாளர்களாக சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல், விரிவுரையாளர் ச. லலீசன், கொக்குவில் இந்து கல்லூரி தமிழாசிரியர் எஸ். சந்திரசேகர் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

இளையோரின் சமய நம்பிக்கைகளை உயர்த்தும் விதத்திலும் சமய இலக்கியங்களை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் திறனை வளர்க்கும் நோக்குடனும் இக் கருத்தரங்கு முன்னெடுக்கப்படுவதாகவும் ஆர்வமுள்ள எவரும் இதில் பங்கேற்று பயன் பெறலாம் எனவும் நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-6)




# எழுச்சிப்பாடலை ஒலிபரப்பியமையால் குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணை

(கரவெட்டி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் எழுச்சிப் பாடலை ஒலிபரப்பிய ஆலய நிர்வாக உறுப்பினர்கள் மூவரை பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸார் தீவிர விசாணைக்குட்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, வடமராட்சி நெல்லியடி ஸ்ரீ முருகமூர்த்தி காளியம்பாள் ஆலய மஹோற்சவம் நடைபெற்று வருகின்றது.

இவ்வுற்சவத்தின் 2 ஆம் நாள் உற்சவ தினமாகிய நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை பக்திப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன.

அச்சமயம் பாடலின் இறுதியில் விடுதலைப்புலிகளின் எழுச்சிப் பாடலும் ஒலிபரப்பப்பட்டுள்ளது. இது ஆலய நிர்வாகத்தினர் அறியாமையினால் ஏற்பட்டுள்ளதாகவே தெரியவருகின்றது.

இதனை அடுத்து ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களை பயங்கரவாத குற்றத் தடுப்பு பொலிஸார் தீவிர விசாரணைக் குட்படுத்தியுயதோடு அவர்கள் புகைப்படம் எடுக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. (அ-9-24)

ஒழுக்கத்துடன் கூடிய துணிச்சலும், வீர உணர்வும் இருந்தால் தான் நாம் செய்யும் அனைத்து செயல் களும் அறச்செயல்களாகவே இருக்கும்.

-ராபர்ட் லூயி ஸ்டீவன்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மனிதநேயம் இழந்த வாழ்வும் ஒரு வாழ்வோ!

யாழ் குடாநாட்டில் செப்பனிட வேண்டிய பல விடயங்கள் உண்டு. இதில் உளம் சார்ந்த விடயங்களும் அடங்கும்.

காணிக்கு வேலி அடைப்பது முதல், யாழ்-கொழும்பு பிரயாணத்தின் போது ஆசனங்களைச் சரித்து உறங்குவது வரை உளம் சார்ந்த விடயங்களாகும்.

யாழ்- கொழும்பு பயணத்தின் போது சொகுசு பஸ்களில் பயணிப்பவர்களில் சிலர் தாம் இருக்கும் ஆசனங்களை, பின் ஆசனத்தில் இருக்கும் பயணியின் மடியில் முட்டும் அளவிற்கு சரித்து விட்டு சயனம் கொள்வர்.

ஆயிரத்து முந்நூறு ரூபாய் கொடுத்ததற்காக தான் இருக்கும் ஆசனத்தை எந்தளவுக்கும் சரிக்க முடியும் என்று நினைக்கின்ற மனநிலை இருக்கிறதே! இதுதான் மிகப் பெரிய ஆபத்து.

தனது செயலால் மற்றவர்களுக்கு ஏதேனும் இடைஞ்சல் உண்டா? என்று சிந்திக்கும் அளவிற்குக் கூட மனிதம் இல்லாத மனிதர்களால் தான் அத்தனை அனர்த்தங்களும் நடந்தேறுகின்றன.

யாழ்-கொழும்பு மற்றும், கொழும்பு-யாழ்ப்பாணப் பயணம் என்பது நீண்ட மணிநேரம் கொண்டது.

நீண்ட நேரமாகப் பஸ்ஸில் பயணிப்பது என்பது மிகவும் இடைஞ்சலானது என்பதை மறுப்பதற்கில்லை.

இந்நிலையில் முன்னாசனத்தில் இருப்பவர் தனது ஆசனத்தை முடிந்தளவிற்குச் சரிக்கும் போது, பின்னாசனத்தில் இருப்பவரின் நிலைமை மிகவும் பரிதாபமாகி விடுகின்றது.

சிலவேளைகளில் பின்னாசனத்தில் இருப்பவர் பேசாப்பிறவி என்றால் அவர்படும் அவஸ்தை சொல்லிமாளா.

மாறாக பின்னாசனத்தில் இருப்பவர் சற்று சண்டித்தனமானவர் என்றால், முன்னாசனத்தில் இருப்பவர் பயணம் முடியும் வரை மூக்கைப் பொத்திக்கொள்ளும் நிலைமையும் ஏற்படலாம்.

எனவே எங்களிடம் இருக்கக் கூடிய உளம் சார்ந்த- மற்றவர்களுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய விடயங்கள் தொடர்பில் உள்ளத் தெளிவும் மனப்பக்குவத்தையும் ஏற்படுத்துவதில் பள்ளிகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை கடுமையாகப் பாடுபடவேண்டும்.

க.பொ.த (சா/த) வரை சமயக் கல்வியைக் கற்ற ஒருவர், தன் வாழ்வில் வேலிக்கும் எல்லைக்கும் சண்டையிடுகிறார் என்றால், பாடசாலைகளில் நடைமுறைகளில் இருக்கக் கூடிய சமயக் கல்வியின் இலக்கு வெற்றியடையப்படவில்லை என்றே கூற வேண்டும்.

வீதியில் குப்பை கொட்டுதல், சமாந்தரமாக சைக்கிள் ஓட்டிச் செல்லுதல், வேகமாக வாகனம் செலுத்தல், வீதி ஒழுங்கு முறைகளை பின்பற்றாமை போன்ற அத்தனையும் எங்களிடம் இருக்கக் கூடிய மனிதப் பண்பிற்கான பஞ்சத்தையே சுட்டிநிற்கின்றது.

ஆக, இந்தப் பஞ்சம் போக்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகள் பற்றிச் சிந்திக்கத் தவறினால் நிலைமை மிகவும் மோசமாவது தவிர்க்க முடியாததே.

# எழுத்தாளர் கீத் நோயரை யார் தாக்கினார் என்பது தெரியாது

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தாராம்

பிரபல பாதுகாப்பு பத்தி எழுத்தாளர் கீத் நோயரை யார் தாக்கினார்கள் என்பது தெரியாது என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு ராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

இலங்கை மனித உரிமை விவகாரங்கள் குறித்து ஊடகவியலாளர்கள் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் அப்போதைய தலைவர் செயலாளர்களான சனத் பாலசூரிய மற்றும் போதல ஜயந்த ஆகியோரிடம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் முன்னெடுக்கப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் பிரசாரம் செய்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்திற்கு தாம் முக்கியத்துவம் அளிக்கப் போவதில்லை எனவும் தீர்மானத்தில் மாற்றமின்றி யுத்தத்தை முன்னெடுக்கப் போவதாகவும் பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்களை சுமத்துவோரை கைது செய்ய முடியாது எனினும் அவற்றைப் பொருட்படுத்தப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உழைக்கும்பத்திரிகை சங்கத்தின் அப்போதைய தலைவர் மற்றும் செயலாளரிடம் பாதுகாப்புச் செயலாளர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளதாக அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளக் குறிப்பு அனுப்பி வைத்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 2 ஆம் திகதி இந்தக் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

## லங்கா மிரரில் 9 பேர் கைது

லங்கா மிரர் இணையதளத்தின் அலுவலகத்தை நேற்று சோதனையிட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சி.ஐ.டி) அங்கிருந்த 9 பேரை கைது செய்துள்ளனர்.

எதுல்கோட்டே பகுதியிலுள்ள மேற்படி அலுவலகத்திலிருந்து மடிக் கணினி உட்பட 7 கணினிகளையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, நாரஹென்பிட்டி அன்டர்சன் தொடர்மாடியிலுள்ள, சிறிலங்கா எக்ஸ் நியூஸ் இணையதளத்தின் ஆசிரியர் ருவன் பேர்டினன்ட்டின் வீட்டிலும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சோதனையிட்டனர்.

அவரின் வீட்டிற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் சென்றிருந்தனர். அவர்கள் மடிக்கணினிகளை சோதனையிட்டதுடன் அங்கிருந்த சிலரிடம் வாக்குமூலங்களையும் பெற்றனர். (எ-11)

## வீதி மூடப்படும்

வீதி அகலிப்பு வேலைகளுக்காக நாளைமுதலாம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை யாழ்- பருத்தித்துறை வீதியின் ஆவரங்கால் சந்தியிலிருந்து வல்லைசந்தி வரை வீதி மூடப்பட்டிருக்கும்.

இக் காலப்பகுதியில் சகல மக்களும் அச்சுவேலி ஊடாக வல்லை வீதியை பயன்படுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார். (எ)

## மாணவர் தலைமைத்துவ செயலமர்வு

(மல்லாவி)

ஒரே நாடு ஒரே மக்கள் என்ற பொது அமைப்பின் ஒழுங்கமைப்பில் வவுனியா வடக்கு, தெற்கு துணுக்காய் ஆகிய 3 கல்வி வலயங்களிலுள்ள தமிழ், சிங்கள மாணவர்களுக்கான மாணவர் தலைமைத்துவ 3 நாள் செயலமர்வு நடைபெற்று வருகிறது.

இச்செயலமர்வு நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளை ஞாயிற்றுக் கிழமை வரை வவுனியா தரணிக்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்று வருவதாக வவுனியா வடக்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தவரட்ணம் அறிவித்துள்ளார்.

முதன்முறையாக தமிழ், சிங்கள பாடசாலை மாணவர்கள் இணைந்து கொள்ளும் இச்செயலமர்வில் முந்நூறு தமிழ் மாணவர்களும் இருநூறு சிங்கள மாணவர்களும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-15)

## ஞான வைரவர் ஆலயத்தின் நிர்வாகசபைத் தெரிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தின் நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் நடை பெற்றது.

இதில் தலைவராக க.பாலசுப்பிரமணியம், உப தலைவராக இ.சூரியகுமார், செயலாளராக தி. செந்தூரன், உப செயலாளராக அ.ராதாகிருஸ்ணன், பொருளாளராக கு. சுந்தரலிங்கம், போஷகர்களாக ஆ. சாந்தலிங்கம், து.சைலோகநா தன், கணக்காய்வாளர்களாக அ.ம.ரவீந்திரன், ப. பகீரதன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக யு.அகிலன், தி.சத்தியகுமார், ந. சிவபாதசுந்தரம், சி.சிவதேவகி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (8-9)

## கல்வெட்டு சாசனங்கள் பயிற்சிக் கருத்தரங்கு

(கொழும்பு)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்த மூன்று வருடங்களாக பல்கலைக்கழகங்களில் வரலாறு, தொல்லியல், தமிழ், இந்து நாகரிகம் ஆகிய துறைகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்வெட்டுச் சாசனங்களை வாசித்தறியும் திறனை விருத்தி செய்யும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வாரகாலப் பயிற்சிக் கருத்தரங்கு ஒன்றை நடத்தி வருகின்றது.

இவ்வருடம் இப்பயிற்சி பயிலரங்கினை இல 248,1/1, காலி வீதி, கொழும்பு-04 இல் அமைந்துள்ள திணைக்களக் கேட்போர் கூடத்தில் யூலை மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 10 நாட்களுக்கு நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சிப் பயிலரங்கின் விரிவுரைகள், சாசனவியல் அதி சிறப்புத் தேர்ச்சி பெற்ற தமிழக தொல்பொருட் திணைக் களத்தைச்சார்ந்த கலாநிதி சி. சாந்தலிங்கம், கலாநிதி எஸ். இராஜகோபால் இலங் கையின் மூத்த வரலாற்றுப் பேராசிரியர் சி. பத்மநாதன், பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் ஆகியோரால் நடத்தப் படும். பிராமி சாசனங்கள், வட்டெழுத்துச் சாசனங்கள், அசோகன் காலத்துச் சாச னங்கள், இலங்கை சாசனங்கள் போன்ற தலைப்புக்களில் விரிவுரைகள் இடம் பெறும்.

இவ்விடயம் தொடர்பான அறிமுகம் மற்றும் அடிப்படைப் பயிற்சிகள் என்பனவற்றை கொண்டமையும் இப்பயிலரங்கில் இம்முறை தமிழ் இலக்கியம், வரலாறு சார்ந்த ஆர்வலர்களினையும் இணைத்துக் கொள்ள உத்தேசித்துள்ளது.

இப்பயிற்சியைப் பெற ஆர்வம் கொண்டவர்கள் தமது பெயர், முகவரி, கல்வித் தகைமை, வயது, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களை எதிர்வ ரும் யூலை மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், இந்து சமய கலா சார அலுவல்கள் திணைக்களம், 248,1/1, காலி வீதி, கொழும்பு-04 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் எனவும் இப்பயிற்சி நெறிக்கான பயிலுநர்கள் தகைமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மனிதன்



மனிதனின் இலட்சியம் என்ன? இன்ப நுகர்ச்சியா, ஞானமா? கட்டாயமாக இன்ப நுகர்ச்சி அல்ல. சுகத்தையோ துக்கத்தையோ அனுபவிப்பதற்காகப் பிறந்தவன் அல்ல மனிதன்.

ஞானமே இலட்சியம். நாம் பெறமுடிந்த ஒரே இன்பம் ஞானம்தான்.

மனிதனுக்கு ஒழுக்கமும் தூய்மையும் ஏன் தேவை? ஏனெனில் அது அவனது சங்கல்பத்தைத் திடம்பெறச் செய்கிறது.

உண்மையான இயல்பை உணர்த்துவதன் மூலம் சங்கல்பத்திற்கு வலிமை தருகின்ற ஒவ்வொன்றும் ஒழுக்கம். இதற்கு மாறானதை விளைவிக்கும் ஒவ்வொன்றும் ஒழுக்கமின்மை.

மனிதன் அல்லவா பணத்தை உருவாக்குகிறான்!. பணம் மனிதனை உருவாக்கியது என்று எங்கே நீ கேள்விப்பட்டாய்? உன் எண்ணத்தையும் பேச்சையும் முழுமையாக ஒன்றுபடுத்தி விட்டால், உன்பேச்சும் செயலும் ஒன்றாக இருக்குமானால் பணம் தண்ணீரைப்போல் தானாக உன் காலடியில் வந்து கொட்டும்.



# இலங்கை –பாகிஸ்தான் இரண்டாவது டெஸ்ட் இன்று



இலங்கை அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி S.S.C சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட் 5 ஒருநாள் போட்டி மற்றும் இரண்டு 20-20 போட்டிகளில் பங்குபற்றி வருகின்றது.

20-20 போட்டி சமநிலையிலும் சர்வதேச ஒருநாள் போட்டியை 3-1 என்ற விகிதத்திலும் இலங்கை அணி கைப்பற்றி இருந்தது. கடந்த 22 ஆம் திகதி காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரும் உலகின் முதல் நிலை வீரருமான குமார் சங்கக்காரவின் அபார சதத்தின் மூலம் இலங்கை அணி தனது அபார வெற்றியை பதிவு செய்திருந்தது. இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல்கக் கலந்து கொள்வதும் பாகிஸ்தான் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் யுனிஸ்கான் சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடி வருவது பாகிஸ்தான் அணிக்கு பக்கபலமாகவே காணப்படுகின்றது. கடந்த போட்டியில் இலங்கை அணி 209 ஓட்டங்களால் வெற்றி பெற்றதன் மூலம் தொடரில் 1-0 என்ற ரீதியில் முன்னிலை வகிக்கின்றது. கடந்த போட்டியில் குமார் சங்கக்கார 1 ஓட்டத்தினால் தனது ஒன்பதாவது இரட்டைச் சதத்தினை தவற விட்டும் ஆட்டநாயகன் விருதினை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.




# இலங்கை தொடரில் இம்ரான் தாஹிர்




இலங்கை ஏ அணிக்கெதிராக இடம்பெறவுள்ள இரண்டு உத்தியோகப்பற்றற்ற டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடருக்கான அணியில் தென்னாபிரிக்க ஏ அணி சார்பாக தென்னாபிரிக்காவின் டெஸ்ட் வீரர் இம்ரான் தாஹிர் இணைக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிராக தென்னாபிரிக்க அணி இங்கிலாந்தில் வைத்து முக்கியமான தொடரில் பங்கேற்கவுள்ள நிலையில் அத்தொடருக்கு முன்னதாக சிறந்த பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காகவே இம்ரான் தாஹிர் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் பிறந்து தற்போது தென்னாபிரிக்க அணி சார்பாகப் போட்டிகளில் பங்குபற்றிவரும் இம்ரான் தாஹிர் தென்னாபிரிக்க அணி சார்பாக இதுவரை 7 போட்டிகளில் பங்கு பற்றியுள்ளார். மிகச் சிறந்த புறச்சுழற்பந்து வீச்சாளராகக் கருதப்படும் இம்ரான் தாஹிர் போதுமான அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவே இலங்கை ஏ அணிக்கெதிரான தொடரில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொதுவாகவே இலங்கை வீரர்கள் சுழற்பந்து வீச்சாளர்களைச் சிறப்பாக எதிர்கொள்பவர்கள் எனக் கருதப்படுவதால் இத்தொடர் இம்ரான் தாஹிருக்கு முக்கியமானதாக அமையும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் ஃபெடரர்



விம்பிள்டன் டெனிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவின் 2 ஆவது சுற்றில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஆர்ஜென்டினாவின் ஜுயன் மொனாகோ ஆகியோர் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னே றியுள்ளனர். விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் டெனிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.

நடந்த ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், இத்தாலியின் பேபியோ போக்னியுடன் மோதினார்.

இதில் அபாரமாக ஆடிய பெடரர் 6-1, 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்கில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு இரண்டாவது சுற்றுப் போட்டியில் ஆர்ஜென்டினாவின் யூஜன் மொனாகே 6-2 ,3-6, 7-6 என்ற செட் கணக்கில் பிரான்ஸ் வீரர் ஜெரிமி சார்டியை வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் செர்பியா வின் இவானோவிச், ஸ்பெயினின் மரியா ஜோஸ் மார்டினஸ்- சான்சை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய இவானோ விச் 6-3, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றிக்கு முன்னேறினார்.

மற்றைய முதல் சுற்றுப் போட்டிகளில் சுலோவாகியா வின் டொமினிகா சிபுல்கோவா, ஜேர்மனியின் ஜூலியா கோயர்ஜஸ், பிரான்சின் அலைஸ் கார்னட், உக்ரைன் கதரினா பாண்டரன்கோ, இத்தாலி யின் சாரா இராணி ஆகியோர் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் ஜேர்மனியின் சபின் லிசிக்கி 3-6, 6-2, 8-6என்ற செட் கணக்கில் செர்பியாவின் போஜனா ஜோவனோஸ்கியை வீழ்த்தி ஸ்டீபன்ஸ் ஆகியோர் வெற்றி பெற்றனர். மற்றைய இரண்டாவது சுற்றுப் போட்டிகளில் இங்கிலாந்தின் ஹெதர் வாட்சன், அமெரிக்காவின் சுலோனி ஸ்டீபன் ஆகியோர் வெற்றி பெற்றனர்.










வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தின் நடைபெற்றது. இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் யா/ இந்துக் கல்லூரி முதலாமிடத்தையும் யா/மத்திய கல்லூரி இரண்டாம் இடத்தையும் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்ட அணியினர் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களுடன் நிற்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- N.குமார்)

# ஜேர்மனியை வீழ்த்தியது இத்தாலி

யூரோ கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளில் இத்தாலி அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. அரையிறுதிப போட்டியில் ஜேர்மனி அணியை 2-1 என்ற கணக்கில் வீழ்த்தியதை அடுத்தே அவ்வணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

போட்டியின் 20 வது நிமிடத்தில் இத்தாலி அணி சார்பாக மரியா பலோடெல்லி முதலாவது கோலைப் பெற்றுக் கொடுக்க இத்தாலி அணி ஆரம்ப நிலை ஆதிக்கத்தைப் பெற்றது

36 வது நிமிடத்தில் மரியா பலோடெல்லி இத்தாலி அணி சார்பாக இரண்டாவது கோலைப் பெற்றுக்கொடுக்க இத்தாலி அணி 2-0 என்ற முனனிலையைப் பெற்றுக் கொண்டது. முற்பாதியில் மேலதிக கோல்கள் கிடைக்கப் பெறாதுபோக முற்பாதி 2-0 என்ற கணக்கில் இத்தாலி வசமானது.

இறுதியாகப் போட்டியின் 90 வது நிமிடத்தில் ஜேர்மனி அணி கோலொன்றைப் பெற்றுக் கொண்ட போதிலும், இத்தாலி அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெறுவதைத் தடுக்க முடியவில்லை.

இறுதிப் போட்டியில் இத்தாலி மற்றும் ஸ்பெயின் அணிகள் நாளை மோதவுள்ளன.

## 80 பேருடன்...

பாணம் நகர் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் ஆசிரியராக பணிபுரிந்து வருபவர்.

பின்னர் வீட்டில் இருந்தவர்களை எச்சரித்து பணம் மற்றும் நகைகளை அபகரிக்க முற்பட்டபோது வீட்டில் இருந்தவர்கள் அத ற்கு உடன்படாததனால் 2 வயதுக் குழந்தையை பணயமாக திருடர்கள் வைத்துள்ளனர்.

குறித்த குழந்தையின் கழுத்தினில் கத்தியை வைத்து அச்சுறுத்தியதால் வேறு வழியில்லாமல் வீட்டில் இருந்த சுமார் 50 பவுண் தங்க நகைகள், இரண்டு லப்டொப் வகைக் கணனி, ஒருதொகைப் பணம் (சுமார் ஒரு லட்சம் ரூபாய் பணம்), வேறு சில பொருட்களையும் திருடிச் சென்றனர்.

இதில் சுமார் 18 பவுண் பெறுமதியான தங்க நகைகள், திருநெல்வேலி கேணியடி ஞானவைரவர் ஆலயத்திற்கு உரியது எனவும் திருட்டு போனது இந்த ஆலயத்தின் பொருளாளரின் வீட்டில் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் ஆலயத்தின் பொருளாளரான ரா.இராஜேஸ்வரன் என்பவரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-6)

## முல்லை மாவட்டத்தில் நடைபெறவுள்ள 90வது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டிய போட்டிகள் தொடர்பான அறிவித்தல்

1. பாடசாலை மாணவர்களுக்கிடையிலானது

❖ பேச்சுப் போட்டி கீழ்ப் பிரிவு - தரம் 06 - 08 வரை
தலைப்பு 1. நான் அறிந்த கூட்டுறவுப் பெரியார்
2. கூட்டுறவே நாட்டுயர்வு
நேரம் :- 04 - 05 நிமிடம்

❖ பேச்சுப் போட்டி மத்திய பிரிவு - தரம் 09 - 11 வரை
தலைப்பு 1. பாடசாலை கூட்டுறவு சங்கம்
2. கூட்டுறவுக் கல்வி
நேரம் :- 05 - 06 நிமிடம்

❖ பேச்சுப் போட்டி மேற் பிரிவு - தரம் 12 - 13 வரை
தலைப்பு 1. நான் ஒரு கூட்டுறவு சங்கத்தின் தலைவரானால்
2. கூட்டுறவு கொள்கைகள்
நேரம் :- 05 - 07 நிமிடம்

2. ❖ கவிதை கீழ்ப் பிரிவு - தரம் 06 - 08 வரை
தலைப்பு 1. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
2. கூட்டுறவால் உயர்வோம்
நேரம் :- 03 நிமிடம்

❖ கவிதை மத்திய பிரிவு - தரம் 09 - 11 வரை
தலைப்பு 1. கூட்டுறவின் பலம்
2. இருண்ட வாழ்வில் மிளிர்ந்த தீபம் கூட்டுறவு
நேரம் :- 04 நிமிடம்

❖ கவிதை மேற் பிரிவு - தரம் 12 - 13 வரை
தலைப்பு 1. புதுமை படைக்கும் கூட்டுறவு
2. கிராமிய வாழ்வும் கூட்டுறவும்
நேரம் :- 05 நிமிடம்

3. ❖ கட்டுரை - மத்திய பிரிவு - தரம் 09 - 11 வரை
தலைப்பு 1. கூட்டுறவில் ஜனநாயகத்தின் பங்கு
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
(150 - 200 சொற்கள்)

❖ கட்டுரை - மேற் பிரிவு - தரம் 12 - 13 வரை
தலைப்பு 1. கூட்டுறவு அபிவிருத்தி ஊடாக தேசிய அபிவிருத்தி
2. கூட்டுறவின் இன்றைய நிலை
(200 - 250 சொற்கள்)

## கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கிடையிலான போட்டிகள்

❖ பேச்சுப் போட்டி
தலைப்பு 1. மக்கள் சேவையில் கூட்டுறவின் பங்கு.
2. கூட்டுறவை வளர்த்து நாட்டை அபிவிருத்தி செய்வோம்.
நேரம் :- 04 - 05 நிமிடம்

❖ வினாடி வினாப் போட்டி
விடயம்: கூட்டுறவு சார்ந்ததும், பொது அறிவு சார்ந்ததும்
(ஒரு கூட்டுறவு நிறுவனத்தில் இருந்து இருவர் மட்டும் பங்குபற்றலாம்)

❖ விவாத அரங்கு
தலைப்பு : கூட்டுறவு விருட்சத்தின் ஆணிவேர் பணியாளர்கள்/ அங்கத்தவர்கள்
(ஒரு கூட்டுறவு நிறுவனத்தில் இருந்து இருவர் மட்டும் பங்குபற்றலாம்)

மேற்படி பணியாளர்களுக்கான போட்டிகளில் பங்குபற்றும் கூட்டுறவு நிறுவன்ங்கள் எதிர்வரும் 03.07.2012 ந.ப. 12.00 மணிக்கு முன்னதாக விண்ணப்பங்களை விழாக்குழு, செயலாளர் திரு. சி. வேதவனம் பொதுமுகாமையாளர் (மு/மா/ப/தெ/வ/அ/கூ/சங்கங்களின் இணையம்) முள்ளியவளை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மேற்படி போட்டி 05.07.2012 மு.ப. 11.00 மணிக்கு ஒட்டுசுட்டானில் அமைந்திருக்கும் முத்துஐயன்கட்டு ப.நோ.கூ. சங்கத்தில் இடம்பெறும்.

## சிறந்த கூட்டுறவாளர் தெரிவு

மேற்படி தெரிவு ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து மூவரை தெரிவு செய்து அவர்கள் தொடர்பான பூரண செயற்பாட்டு விபரம் இணைக்கப்பட்டு அச்சங்கத்தின் தலைவர்/ பொதுமுகாமையாளரின் சிபார்சுகளுடன் எதிர்வரும் 07.07.2012 திகதிக்கு முன்தாக விழாக்குழு செயலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி போட்டிகள் தொடர்பில் தொடர்பு கொள்ள வேண்டி வரின் திரு. நா. இரஞ்சிதகுமார், தலைவர், விழாக்குழு. தொலைபேசி இலக்கம்: 0775389712 இற்கோ அல்லது திரு. சி. வேதவனம், செயலாளர், விழாக்குழு. தொலைபேசி இலக்கம்: 0776787338 இற்கோ அல்லது திரு. யோசப் ஸ்ராலின், இணைப்பாளர், விழாக்குழு. தொலைபேசி இலக்கம்: 0773459178 இற்கோ தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

கூட்டுறவே நாட்டுயர்வு.

நா. இரஞ்சிதகுமார்,
தலைவர்,
விழாக்குழு,
முல்லை மாவட்டம்.

சி. வேதவனம்,
செயலாளர்,
விழாக்குழு,
முல்லை மாவட்டம்.

## பொதுவான போட்டிகள்

1. துவிச்சக்கர வண்டி ஓட்டம் ஆண் - 70 km தூரம்
காலம்: 04.07.2012 காலை 6.00 மணி
மல்லாவியில் ஆரம்பித்து முல்லைத்தீவு கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை முன்றலில் முடிவடையும்.

2. துவிச்சக்கர வண்டி ஓட்டம் பெண் - 25 km தூரம்
காலம்: 04.07.2012 காலை 6.00 மணி
ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் ஆரம்பமாகி முல்லைத்தீவு கூ.அ.உ ஆணையாளர் பணிமனை முன்றலில் முடிவடையும்.

மேற்படி போட்டியில் பங்குபற்றுபவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

கொக்குவீல் - 48 பல்லு பிறிவீல் - 18 பல்லு

1. மரதன் ஓட்டம் ஆண் - 10 km தூரம்
காலம்: 05.07.2012 காலை 6.00 மணி
தேவிபுரம் சந்தியில் ஆரம்பமாகி விசுவமடு நகர சந்தியில் முடிவடையும்.

மரதன் ஓட்டம் பெண் - 5 km தூரம்
காலம்: 05.07.2012 காலை 6.00 மணி
உடையார்கட்டுச் சந்தியில் ஆரம்பமாகி விசுவமடு நகர சந்தியில் முடிவடையும்.

மேற்படி போட்டியில் பங்குபற்றுபவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

## அங்கத்தவர்களுக்கான போட்டிகள்

❖ கடல்சார் போட்டி

| | |
|---|---|
| 1. நீச்சல் போட்டி | 01 கி/மீற்றர் |
| 2. துடுப்பு வலித்தல் | 0.5 கி/மீற்றர் |
| 3. இயந்திரப் படகோட்டம் | 03.கி/மீற்றர் |

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளும் விண்ணப்பதாரிகள், பொதுமுகாமையாளர், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு எதிர்வரும் 03.07.2012 ந.ப. 12.00 மணிக்கு முன்னதாக தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி போட்டி 06.07.2012 காலை 9.00 மணிக்கு முல்லைத்தீவில் நடைபெறும்.

❖ பனை தென்னை சார் போட்டிகள்
1. கிடுகு இழைத்தல் 06 அடி நீளம்
2. நீத்துப் பெட்டி இழைத்தல் - 25 ஓலைகள் கொண்டது.
(கிடுகிற்குரிய ஓலையும், நீத்துப் பெட்டிக்குரிய ஓலையும் ஈர்க்கும் போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும்.)

மேற்படி போட்டிகளில் பங்குபற்றும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை 03.07.2012 ந.ப. 12.00 மணிக்கு முன்னதாக அங்கத்துவ சங்கங்கள் பெற்று விழாக் குழுச் செயலாளர் திரு. சி. வேதவனம் பொதுமுகாமையாளர் (மு/மா/ப/தெ/வ/அ/கூ/சங்கங்களின் இணையம்) முள்ளியவளை என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

இப்போட்டி எதிர்வரும் 04.07.2012 காலை 10.00 மணிக்கு ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள முல்லைமாவட்ட சி.க.கூ.சங்க சமாச வளாகத்தில் நடைபெறும். மேற்படி அங்கத்தவர்களுக்கான கடல்சார், பனை தென்னைகள் சார் போட்டிகளில் பங்குபற்றும் அங்கத்தவர்களை அவ்வவ் சங்கங்களின் தலைவர், பொதுமுகாமையாளர் உறுதிப்படுத்தி சிபார்சு செய்து அனுப்புதல் வேண்டும்.

## பாடசாலை மட்ட திறந்த போட்டிகள்

❖ நாடகம் - குழு 10 பேருக்கு மேற்படலாகாது
கூட்டுறவின் ஊடாக சமூக அபிவிருத்தி எனும் எண்ணக்கரு பிரதிபலிக்க வேண்டும்.
நேரம் :- 25 - 30 நிமிடம்

❖ விவாத அரங்கு - குழு- 05 பேருக்கு மேற்படலாகாது
தலைப்பு: தேசிய அபிவிருத்தியில் மேலோங்கி நிற்பது கூட்டுறவின் பங்கு/ தனியார் பங்கு

❖ வினாடி வினா போட்டி - குழு - 05 பேர்
விடயம் : கூட்டுறவு / பொது

❖ நடனம் - குழு- 10 பேருக்கு மேற்படலாகாது
தலைப்பு: கிராமியத்தை தழுவியதாக இருத்தல் வேண்டும்.
நேரம் :- 07 - 10 நிமிடம்

பாடசாலை மட்டத்தில் தனிப் போட்டிகளில் ஒருவரும் குழுப் போட்டியில் ஒரு குழுவும் விண்ணப்பித்தல் வேண்டும். கோட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெறுபவர்கள் மட்டும் மாவட்ட மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்படுவார்கள். கோட்ட மட்ட போட்டி புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று 06.07.2012 முறையே புதுக்குடியிருப்பு கைவேலி கணேச வித்தியாலயத்திலும், முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியிலும் இடம்பெறும். ஒட்டுசுட்டான் துணுக்காய் பாண்டியன்குளம் ஆகிய பாடசாலைகளுக்கான கோட்ட மட்ட போட்டிகள் 07.07.2012 முறையே ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலும் மல்லாவி மத்திய கல்லூரியிலும் பாலிநகர் மகா வித்தியாலயத்திலும் இடம்பெறும். பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட போட்டித் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(C-365)

# இலங்கை வந்த சிவ்சங்கர் மேனன்...

இலங்கை இனப்பிரச்சினைக்கு இலங்கையாலே ஒரு தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்தியா எடுத்திருந்தாலும், இந்த விடயத்தில் தான் தொடர்ந்து அனைத்து தரப்புக்களுடனும் பேசி வருவதாகவும், ஒரு உடன்பாட்டுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்க இந்தியா தயாராக இருப்பதாகவும், இந்தியாவின் இலங்கைத் தூதரம் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறு கிறது.

இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்தப் பிரச்சினையில் 2008-ல் இரு தரப்புக்களும் ஒப்புக்கொண்ட யதார்த்த ரீதியிலான ஏற்பாடுகள் தொடரப்பட வேண்டும். ஒரு முறையான மாற்று ஏற்பாட்டை எட்டும் வரை இந்த ஏற்பாடுகள் தொடரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டதாக இந்த அறிக்கை கூறுகிறது.

இரு நாட்டு மீனவர்களும் நடத்திய சந்திப்புக்கள் மற்றும் விவாதங்கள் மேலும் தொடரப்பட்டு, அந்த முயற்சிகள் ஊடாக வரும் எந்த ஒரு புரிந்துணர்வையும், எதிர்காலத்தில் இந்த மனிதநேயப் பிரச்சினைக்குக் காணப்படும் தீர்வின் அடிப்படையாக வைக்கலாம் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.

**சம்பந்தனுடன் சந்திப்பு**

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வு, வடக்கிலும் கிழக்கிலும் தொடரும் நில அபகரிப்புக்கள், இராணுவமயமாக்கல் ஆகியவை குறித்து இந்திய தேசிய பாதுகாப்புச் செயலரிடம் எடுத்துரைத்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இந்த முறை சிவ்சங்கர் மேனனின் விஜயம் ஒரு தெளிவான ஒரு செய்தியை இலங்கை அரசுக்கு சொல்வதற்காகவே மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தான் உணர்வதாக அவர் தெரிவித்தார்.

இது தவிர, இலங்கை அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடத்திவந்த இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் நின்று போயிருப்பது, பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இனப்பிரச்சினையை கொண்டு செல்ல அரசு எத்தனிப்பது ஆகியவையும் விவாதிக்கப்பட்டதாகத் சம்பந்தன் தெரிவித்தார்.

மேலும், நாட்டின் பிற மாகாண சபைகளுக்குத் தேர்தல்களை நடத்தும் சூழல் இருக்கும் போது, வட மாகாணத்துக்கு மட்டும் இன்னும் தேர்தலை நடத்த இலங்கை அரசு முன் வராத பிரச்சினையும் விவாதிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

ஆனால் இந்தியா, ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் நடந்த வாக்கெடுப்பில் இலங்கைக்கு எதிராக வாக்களித்ததால், இந்தியா மீது இலங்கை வருத்தத்தில் இருப்பதாகவும், எனவே இந்தியாவின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கும் நிலையில் இலங்கை இல்லை என்றும் வரும் செய்திகள் பற்றி கருத்துத் தெரிவித்த சம்பந்தன்,

இந்தியா இந்த வாக்கெடுப்பில் ஒரு நிலைப்பாட்டை எடுக்கும் முன்னர் அதன் விளைவுகளைக் கவனத்தில் கொண்டே அந்த முடிபை எடுத்திருக்கும் என்று தான் நம்பு வதாகக் கூறினார்.

மேலும் இந்தியா ஒரு செல்வாக்கு மிக்க பிராந்திய வல்லரசு என்ற நிலையில் இலங்கைப் பிரச்சினையில் அதன் நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் அக்கறையுடன் கவனிக்கும் என்று தான் கருதுவதாகவும், எனவே இந்தியாவுக்கு இலங்கை விடயத்தில் செல்வாக்கில்லாமல் போய்விடும் என்ற கருத்தைத் தான் நம்பவில்லை என்றும் கூறினார். (எ-6,11)

# அரசு வடக்கில்...

தேர்தலை நடத்தாமையானது முழு மக்களின் உரிமைகளையும் மீறும் ஒன்றாகும். வடக்கு மக்களுக்கு இன்னமும் பூரண ஜனநாயகம் கொடுக்கப்படவில்லை என்பதைத்தான் இந்த நிலைமை காட்டுகின்றது. அவர்கள் அவர்களின் பிரதிநிதிகளையும் தெரிவு செய்யும் வாய்ப்பு இல்லாமல் போகின்றது.

ஏன் வடக்கில் தேர்தலை நடத்த அரசு தயங்குகின்றது? தேர்தலைத் தடுப்பதன் மூலம் பிரபாகரனின் கொள்கையை மகிந்த ராஜபக்ஷ கே.பியின் ஊடாக நடைமுறைப் படுத்தப் போகிறாரா?

அரசு வடக்குத் தேர்தலையும் நடத்தி நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையையும் நடைமுறைப்படுத்தினால்தான் அடுத்த வருடம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையை இலங்கையால் இலகுவாக எதிர்கொள்ள முடியும். அதன் பிடியிலிருந்து தப்ப முடியும்.

வடக்குத் தேர்தலை நடத்துமாறு நாம் தொடர்ந்து போராடுவோம். அனைத்துத் தேர்தல்களிலும் நாம் போட்டியிடுவோம். மக்களுக்கு நிவாரணம் வழங்குக என்ற கோஷத்தை முன்வைத்து நாம் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்போம். இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (எ-11)

# கைதிகளால் பிடிக்கப்பட்ட...

கடுமையாக தாக்கப்பட்ட சக கைதியை வவுனியா சிறைக்கு மீண்டும் கொண்டு வரப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், சாதகமான பதில் எதனையும் வழங்காத சிறை நிர்வாகம் நேற்று முன்தினம் கைதிகளுக்கு பலாத்காரமாக உணவை வழங்க முற்பட்டபோதே, இம் மூன்று சிறை அதிகாரிகளும் பணயக் கைதிகளாக தமிழ் அரசியல் கைதிகளால் பிடிக்கப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் இடம்பெற்றதை அடுத்து வவுனியா சிறைச்சாலையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டதுடன், இந்த அதிகாரிகளை மீட்கும் பணிகளும் தீவிர படுத்தப்பட்டிருந்தன.

இச்சிறை அதிகா ரிகளை விடுவிப்பது தொடர்பாக நேற்று முன்தினம் மாலை முதல் மேற்கொள் ளப்பட்ட பல்வேறு முயற்சிகளும் வெற்றி யடையவில்லை.

நேற்றுக் காலையும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர முயற்சித்த போதிலும் தமிழ் அரசியல் கைதிகள் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

தமது கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் மட்டுமே சிறை அதிகாரிகளை விடுவிக்க முடியும் என தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் நேற்றுப் பகல் தந்திரோபாயமாக சிறைச்சாலைக்குள் பிரவேசித்து தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறை அதிகாரிகளை பாதுகாப்பாக மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# பட்டதாரிகளுக்கான...

உயர்தொழில்நுட்ப நிறுவகத்தின் டிப்ளோமா பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்குவது தொடர்பாக பின்னர் அறியத்தரப்படும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (எ)

# மேலும் 2...

களில் இது கடைசியானது ஆகும்.

புதன்கிழமை வந்த கப்பலிருந்து ..
கப்பட்ட 98 பேரும் இன்னமும் துறை..
தில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில்..
தப் படகும் வந்துள்ளது.

கடைசியாகவும் மூன்றாவதாகவும்..
இந்தப் படகை அதிகாலை கிறிஸ்மஸ்..
பாதுகாப்பாக அழைத்து வந்த பெரிய..
திரேலிய கடற்படை படகும் அண்..
தரித்து நிற்கின்றது.

இதற்கு முன் கடந்த வாரம் இந்தோ..
ஷியாவுக்கும் கிறிஸ்மஸ் தீவுக்கும் இ..
கவிழ்ந்த கப்பலிருந்து 110 பேரைக் காப்..
வதிலும் கடலில் மூழ்கி இறந்து போன..
கருதப்படும் 90 பேரின்சடலங்களை ..
தில் இந்தக் கப்பல் ஈடுபடுத்தப்பட்டது.

செவ்வாய்க்கிழமை கடல்வழியே ..
தொலைவில் 4 பேர் இறந்ததாக நம்பப்..
படகு விபத்தின்போதும் இந்தக் கப்பலே..
வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டது.

# 80 பேருடன்...

சந்திக்கு அருகாமையில் உள்ள பால..
(ஏ9 வீதியில்) நேற்று மாலை 4.30 ம..
வில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் 8 இரா..
வீரர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

பயணிகளுடன் சென்று கொண்..
குறித்த பேருந்து பாலத்தடியில் ..
ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோ..
கட்டுப்பாட்டை இழந்துள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த வாகனத்தை..
துவதற்காக சாரதி முயற்சித்தபோதும்..
பாட்டை இழந்து மூன்றுமுறை மேலு..
மாக தடம்புரண்டுள்ளது.

பேருந்தில் இருந்த பயணிகள் ப..
தத்துடன் கூச்சலிட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொட..
வவுனியா பொலிஸாருக்கு அறிவி..
டதன் பிரகாரம் சம்பவ இடத்திற்கு வி..
பொலிஸார் விபத்துக்குக் காரணமான..
என்ற சந்தேகத்தின் பேரில் சாரதி..
நடத்துநரையும் கைது செய்துள்ளன..

கைது செய்யப்பட்ட இருவரிடமும்..
கொள்ளப்பட்ட விசாரணையின் மூல..
லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உ..
யாளர் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ..
என்பது தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் 50 பேருக்கு மேல் ..
மடைந்தபோதும், எவரும் உயிரிழக்க ..

இருப்பினும் 2 இராணுவ வீரர்..
வயதுச் சிறுவன் உள்ளடங்கலாக மூ..
அநுராதபுரம் மாவட்ட வைத்தியசா..
அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் கவ..
மான நிலையில் அனுமதிக்கப்பட்டு..
என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6;1..


## ஆங்கிலம், பிரெஞ்சு புதிய பிரிவு

சனி, ஞாயிறு மற்றும் வாரநாள் புதிய பிரிவு ஆரம்பம்

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர், பட்டதாரிகள், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் பயிற்சியில் சேரலாம்

| ஆங்கிலம் | பிரெஞ்சு |
| --- | --- |
| சனி, ஞாயிறு : ஆரம்பம் : 30.06.2012 சனிக்கிழமை | சனி, ஞாயிறு : ஆரம்பம் : 30.06.2012 சனிக்கிழமை (இன்று) |
| பிரிவு 1 – காலை 8 – 9 | காலை 9 - 10 |
| பிரிவு 2 : மாலை 3 – 4 | |
| வாரநாள் : ஆரம்பம் : 02.07.2012 திங்கட்கிழமை | வாரநாள் பிரிவு : ஆரம்பம் : 02.07.2012 திங்கட்கிழமை |
| பிரிவு 1 – காலை 8 – 9 | காலை 9 - 10 |
| பிரிவு 2 : மாலை 3 – 4 | |
| கட்டணம் : ரூபா 3000/- | கட்டணம் : 15,000/- |

MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456



## திருமறைக் கலாமன்றம்

விசேட ஒன்றுகூடல்

காலம் : 01.07.2012 (ஞாயிறு)
நேரம் : மு.ப. 10.30 மணி
இடம் : கலைத்தூது கலையகம்
286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

எமது மன்றத்தின் பழைய, புதிய அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் கொடுக்கவும்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2397

செயலாளர்
திருமறைக் கலாமன்றம்

(C-363)



## வீடு வாடகைக்..

கல்லூரி வீதி, இளவாலை..
அமைந்துள்ள சகல வசதிக..
கூடிய வீடு வாடகைக்கு

தொடர்புகளுக்கு:-
077364832..
075554799..



## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளது.

★ விநியோக முகாமையாளர் (ஆண்)
★ களஞ்சியப் பொறுப்பாளர் (ஆண்)
★ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்)
★ சிற்றூழியர் (தேநீர் தயாரித்தலும் சுத்தம் பேணுதலும்) (பெண்)

பொருத்தமும் தகைமையும் உடையவர்கள்
01.07.2012 ஞாயிறு காலை 10.00 மணிக்கு

இல. 3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம் எனும் முகவரியில்
அமைந்துள்ள வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

மனித வள முகாமையாளர்





## யாழ் மண்ணில்....

## கல்யாணமால..

## KALYANA MALAI

( சர்வதேச இலவச திருமண சேவை..

இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



எதிர்வரும் ஜூலை 1ந் திகதி முதல்
உங்கள் வலம்புரியில் கல்யாணமாலை..

மணமக்கள் தேவை..

தொடர்ந்து வெளிவரும். திருமணப் பொருத்தங்களை இலகுவா..
நாள்தோறும் வலம்புரியில் வெளிவரும் கல்யாணமாலையை..
வாசிக்கத் தவறாதீர்கள்

ஊடக அனுசரணை வலம்புரி


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்..